பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

தரமான சேட்டிங்
★ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட் ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின் சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ2/50

இம்போட்டற்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன் பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ் வகைகள்
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

சுடர்: 4 சுக்கில ஹூ சித்திரை மீ 03 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 09 (16 - 04 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-110

## அம்பாந்தோட்டையிலும் நான்கு படையினர் பலி!!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

அம்பாந்தோட்டை கட்டக்கடுவ என்ற இடத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற மற்றொரு நிலக்கண்ணி வெடிச் சம்பவத்தில் ஸ்ரீலங்கா இராணுவப் படையின் ஜீப் ஒன்று தகர்ந்தது.

ஒரு கோப்ரலும் மூன்று சிப்பாய்களும் இந்தத் தாக்குதலில் உயிரிழந்தனர்.

மேலும் மூன்று சிப்பாய்கள் காயமடைந்தனர்.

இத் தகவலை பி.பி.சி நேற்று மாலை அறிவித்தது.

கொழும்பு வானொலித் தகவலின்படி என். கே. வர்ணசூரியா என்ற இராணுவக் கோப்ரலே உயிரிழந்தவர் என்று அறிவிக்கப்பட்டது.

இராணுவத்தினர் ஹுங்கம என்ற இடத்துக்குச் சென்றுவிட்டு திரும்பிக் கொண்டிருந்த போதுதான் அவர்களின் ஜீப் வண்டி நிலக்கண்ணியில் சிக்கியதாகக் கூறப்படுகிறது.

(உ-எ)

## இலங்கையுடன் நேரடியாக பேச விடுதலைப் புலிகள் சம்மதம்!

### அரசாங்கம் நேற்று வெளியிட்ட தகவல்

கொழும்பு, ஏப்ரல் 16

இலங்கை அரசுடன் நேரடிப் பேச்சுக்களை நடத்தத் தயாராக இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்து உள்ளதாக அரசு நேற்றுத் தெரிவித்தது.

இந்த விடயம் சம்பந்தமாக ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கடிதம் எழுதியுள்ளது—

அக் கடிதத்தில், ஜனாதிபதியே இது சம்பந்தமான கூட்டத்திற்குத் தேவை

[6ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளின் முறையானபதில் கிடைத்ததும் நடவடிக்கை

### அமைச்சர் ரஞ்சன் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 16

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து முறையான பதில் கிடைத்தவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை இலங்கை அரசு உடனடியாக மேற்கொள்ளும்.

— இவ்வாறு வெளியுறவு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்தார்.

''தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பத்திரிகை அறிக்கை ஊக்கத்தைத் தருகிறது.

''ஆனல் பத்திரிகை அறிக்கை போதுமானதாக இல்லை. பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முறையான பதில் அவர்களிடமிருந்து இலங்கை அரசுக்கு வரவேண்டும்.

சமாதானம் ஏற்பட இலங்கை அரசு எடுத்து வரும் முயற்சிகள் உளப்பூர்வமானவை''

— இப்படி அவர் தெரிவித்தார். (உ-எ)

# வெலிஓயாவில் நிலக் கண்ணி!

# 21 ஸ்ரீலங்கா சிப்பாய்கள் பலி!!

## இளைஞர் வெட்டிக்கொலை!

வல்வெட்டித்துறை, ஏப். 16

கடந்த வெள்ளிக்கிழமை வருடப்பிறப்பு தினத்தன்று பிற்பகல் மூன்று மணியளவில் நெல்லியடி கல்லூரி வீதியில் சென்றுகொண்டிருந்த இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

உயிரிழந்தவர் சின்னத்தம்பி இன்பநாதன் (வயது 22) என அடையாளம் காணப்பட்டுள்ளது. (உ-160)

## மீனவருக்கு தடை உத்தரவு!

குருநகர், ஏப். 16

கடந்த 13ஆம் திகதி வியாழக்கிழமை முதல் பாஷையூர் மீனவர்கள் மீன்பிடித்தலுக்குச் செல்வதை படையினர் தடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-51)

## மண்டை ஓடு ஏற்றுமதி! இந்தியாவின் புது சாதனை!

கல்கத்தா, ஏப்ரல் 16

மனித எலும்புக் கூடுகள், மண்டை ஓடுகளை ஏற்றுமதி செய்யும் முக்கிய நாடாக இந்தியா உலகில் விளங்குவதாக ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

1985 இல் இருந்த மனித எலும்புகள், மண்டை ஓடுகளை ஏற்றுமதி செய்யும் வர்த்தகத்தை இந்தியா தடை செய்து விட்டது. இருந்தும் இவற்றின் ஏற்றுமதி நடைபெறுவதாக ஏஜன்ஸிச் செய்தி தெரிவிக்கிறது.

பெரிய அளவில் இவற்றை ரகசியமாக இந்தியா ஏற்றுமதி செய்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

1987 ஆம் ஆண்டில் சுமார் 15 ஆயிரம் மனித எலும்புக் கூடுகளும் 50 ஆயிரம் மனித மண்டை ஓடுகளும் தடையை மீறி ஏற்றுமதி செய்யப்பட்டன.

ஆண்டு தோறும் சுமார் 70 ஆயிரம் மனித எலும்புக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ அதிகாரி ஒருவரும் மூன்று பொதுமக்களும் உயிரிழப்பு

கொழும்பு, ஏப்ரல் 16

வெலிஓயாவில் நேற்று இடம் பெற்ற பெரும் நிலக் கண்ணி வெடித் தாக்குதல் ஒன்றில் ஸ்ரீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவரும் 20 சிப்பாய்களும் கொல்லப்பட்டனர்.

மூன்று பொதுமக்களும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

படையினர் பயணம் செய்ததாகக் கூறப்படும் இரு டிராக்டர்கள் கண்ணிவெடியில் சிக்கி சுக்குநூறுகின.

நிலக்கண்ணி வெடித்ததும் அருகில் காட்டினுள் ஒளித்திருந்த தீவிரவாதிகள் இராணுவத்தினரை நோக்கி பலத்த தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## திருமலையில் 4 மணி நேரம் நேற்று ஊரடங்கு தளர்வு

கொழும்பு, ஏப்ரல் 16

திருகோணமலை நகரில் கார் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற பின்னர் நேற்று முதல் தடவையாக ஊரடங்குச் சட்டம் நான்கு மணி நேரம் தளர்த்தப்பட்டது.

காலை 10 மணியில் இருந்து பிற்பகல் 2 மணி வரை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருந்தது.

இதனிடையில் இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் 28 பேரின் சடலங்கள் அடையாண மாகினப்

ட்டதாக அறிவிக்

ளங்காணப்படா லங்கள் திருமலை கடற்படை ஆஸ்பத்திரியின் பிரேத அறைச்சாலையில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயங்களுக்குள்ளான நிலையில் அனுராதபுரம் ஆஸ்த்திரிக்கு வைக்கப் வர்களி மூ பின்னர் உ-எ]

## தமிழர் தாயகக் கோட்பாட்டிற்கு இலங்கை இந்திய ஒப்பந்தம் பயன்படாது

### ஈழவர் ஜனநாயக முன்னணி சுட்டிக்காட்டுகிறது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

தமிழ்பேசும் மக்களின் தாயகக் கோட்பாட்டிற்கு இலங்கை—இந்திய ஒப்பந்தம் எந்தவகையிலும் பயன்படாது.

— இவ்வாறு ஈழவர் ஜனநாயக முன்னணி சுட்டிக்காட்டியிருக்கிறது.

அவ்வமைப்பின் பொதுச் செயலாளர் திரு. வே. பாலகுமாரன் நேற்று விடுத்த அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

''காலம் காலமாக எமது நிலங்களை அபகரித்து வந்த ஸ்ரீலங்கா அரசு, இன்று மகாவலி எல் திட்டமென்ற பெயரில் மேற்கொள்ளும் வெலிஓயாத் திட்டத்தின் மூலம் வடக்கையும் கிழக்கையும் துண்டாடும் சதியை மேற்கொள்கிறது.

ஒவ்வொரு உடன்பாடு ஏற்பட்ட போதும் குடியேற்றங்களை நிறுத்துவதற்கு இணங்கிய அரசு பின் தன்னிச்சையாக அவற்றை உருவாக்கி வந்தமை கண்கூடு.

சுமார் 13 ஆயிரத்து 500 தமிழ் பேசும் குடும்பங்களை நிர்ப்பந்தமாக இடம் பெயர வைத்து வெலிஓயாத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்திய — இலங்கை ஒப்பந்தத்தில் தருவதாக வாக்களிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்க

[6ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



சுக்கில வருஷம் வலு சூடாய் பிறந்திருக்குப் போலை... ஒரே சாவுச் செய்தியாத்தான் கிடக்கு......!

**சுபநேரம்**

16 - 04 - 1989
சித்திரை - 03
ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:
04.34 முதல் 06.04 வரை

ராகுகாலம்:
09 04 முதல் 10.34 வரை

ஏகாதசி விரதம்

## யுத்தநிறுத்தத்தை இடையில் கைவிட அரசுக்குப் படையினர் சிபார்சு!

### நாளை முடிவு தெரியும்

கொழும்பு, ஏப்ரல் 16

ஸ்ரீலங்கா அரசாங்கம் அமுல் செய்திருக்கும் ஒருதலைப்பட்சயுத்தநிறுத்தம் அவசர அவசரமாக இடையில் கைவிடப்படக்கூடும்.

அரசாங்கத் தரப்பு யுத்தநிறுத்தம் உடனடியாகக் கைவிடப்பட வேண்டும் என்று பாதுகாப்புப் படை வட்டாரங்கள் அரசாங்க உயர்மட்டத்திற்குச் சிபார்சு செய்துள்ளன.

எனினும் தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டம் நாளை (திங்கட்கிழமை) ஜனாதிபதி திரு. ஆர்.பிரேமதாச தலைமையில் நடைபெறும்போது இறுதி முடிவு எடுக்கப்படும்.

ஒரு வார கால யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பின்னர் நாட்டில் இடம்பெற்றுள்ள வன்செயல்கள், அவற்றினுல் தோன்றியுள்ள புதிய நிலைமை பற்றி இம் மாநாட்டில் விரிவாக ஆராயப்படும் என்று தெரிகிறது.

இம் மாதம் 12 ஆம் திகதி இலங்கை அரசு ஒருதலைப்பட்சமாக ஒரு வார கால யுத்த நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தியது.

அதன்பின்னர் இடம்பெற்ற வன்செயல்களில் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துவிட்டனர்.

போர்நிறுத்தம் அமுலுக்கு வந்த நான்கு தினங்களில் இடம்பெற்ற உயிரிழப்புக்கள் இவை.

எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 6 மணியுடன் போர் நிறுத்தம் முடிவுக்கு வருகின்றது.

அதற்கு முன்னர் போர் நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று இராணுவ வட்டாரங்கள் சிபார்சு செய்துள்ளன. (அ-எ)

## அமைதிப்படை அதிகாரிகள் ஆலடியை பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

கந்தர்மடம் ஆலடிச்சந்தியில் நேற்று முன்தினம் குண்டு வெடித்த இடத்தை இந்திய அமைதிப்படையின் வடபகுதி பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் ஆர். என். பல்லா நேற்றுப் பார்வையிட்டார்.

அவருடன் பிரிகேடியர் ஜி. எஸ். ஜில்லும் வந்திருந்தார்.

குண்டு வெடிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் சம்பவத்தின் பின்பு அமைதிப் படையினரால் கைப்பற்றப்பட்டதாகச் சொல்லப்பட்ட கிளேமோர், இரு பிளாஸ்ரிக் கொள்கலன்களில் ஜெலிக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரியில் 5 சடலங்கள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

நேற்று முன்தினம் கந்தர்மடம் ஆலடியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து உயிரிழந்த ஐவரின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரியில் ஒட்படைக்கப்பட்டன.

எஸ். தயாபரன் (வயது 28) -திருநெல்வேலி, கே. முருகரட்ணம் (வயது 67) -பலாலி ரோட், வில்சன் அழகக்கோன் (வயது 61) -தெல்லிப்பளை, நல்லையா பாஸ்கரன் (வயது 20) -கந்தர்மடம், மருதப்பு ராஜகுமாரன் [வயது 19] -அரியாலை.

எரிகாயங்களுக்கு இலக்கான மருதப்பு ராஜகுமாரனின் சடலம் நேற்று நண்பகல் அளவில் அமைதிப்படையினரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. (உ-9)

## மேலும் 7 ஆயிரம் துருப்புக்களை இந்தியா திருப்பி அழைக்கும்

புதுடில்லி, ஏப்ரல் 16

இலங்கை வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள அமைதிப் படையின் மேலும் ஐந்து படை அணிகளை விலக்கிக் கொள்ள இந்தியா முன்வந்துள்ளது.

7 ஆயிரம் இந்தியத் துருப்புக்கள் இப் படை அணிகளில் உள்ளன.

இங்கு பாவிக்கப்பட்ட தளபாடங்களையும் அவர்கள் எடுத்துச் செல்வர்.

விரைவில் இத்துருப்புக்கள் தாயகம் திரும்பும் என்று இலங்கை வானொலி தெரிவித்தது. (உ-எ)

## விடுதலைப் புலிகள் அஞ்சலி!

கந்தர்மடத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த தமது இயக்கப் போராளிகள் நால்வருக்கும் மற்றும் மரணமடைந்த பொதுமக்களுக்கும் வீர வணக்கத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

''தேசத்தை மீட்கச் சென்ற குண்டு மோசம் செய்த தேனோ?'' என்ற தலைப்பில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

''எமது மக்களின் குரல்வளையை நெரிக்கும் கரங்களை உடைப்பதற்கு என கொண்டு சென்ற குண்டு இடைவெளியில் தற்செயலாக வெடித்ததினுல் ஏற்பட்ட விபத்தில் எமது போராளிகளான சுபாஸ் (உதயகுமார்), சிறி, கரன், அல்பேட் ஆகியோர் வீர மரணம் அடைந்தனர்'' என அவ்வறிக்கையில் விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்தனர். (உ)

## ஈ.பி.ஆர்.எல்.எவ் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

கந்தர் மடத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை ஈ. பி. ஆர். எல். எவ் கண்டித்துள்ளது. இது தொடர்பாக அவ்வமைப்பின் சார்பில் திரு. க. யோகசங்கரி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இத்தகைய படுகொலைச் சம்பவங்களை தடுத்து நிறுத்தாமல் மௌனமாக இருப்பது

[6 ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

பொமறேனியன் பிறவுண் நிறம் 1½ மாதக் குட்டிகள் பூச்சி அகற்றப்பட்டு உள்ளது. 249, பலாலி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம் (10575)

4 அங்குலக் கன கொங்கிறீற் கற்கள் விற்பனைக்கு உண்டு. 5, 3 அங்குலக் கன கற்களுக்கும் ஓடர் ஏற்கப்படும். ஆனந் பண்ணை, மயிலிட்டி வடக்கு. (153)

பாவித்த வீட்டுத்தளபாடங்கள் T.V. Typewriter Voltage - Regulator, Cycle, Singer Machine மற்றும் பல விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 343, பருத்தித்துறை வீதி, அரசடி சந்தி, நல்லூர். [10573]

வீடியோ கமெரா JVC GXN70E நஷனல் டெக் 180, வீடியோ மிச்ஷர் நஷனல் S1 மொடல் சுடபர் VAS பனசொனிக் சுமெரா MSI விபரங்களுக்கு: புலவர் வீடியோ, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில். [152]

Honda Reconditioned M. D. 90 C. 70 MB. 5 Chaly மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு ண்டு. தொடர்பு 390, பெயின் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (10555)

வான் கோழிக் குஞ்சுகள் தாராக்குஞ்சுகள் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; எ. பா. உமாபதி, மீனுட்சி அம்மன் வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி. (128)

காட்டு விறகு தூக்கு 55/-. யாழ்நகரில் மலிவு விலை விறகு டிப்போ, ஐயப்பன் விறகு டிப்போ 81, செட்டித்தெரு நல்லூர். (10556)

### மில் விற்பனைக்கு

யாழ நகருக்கு அண்மையில் நெல் சந்தைப்படுத்தும் சபையால் பதியப்பட்ட அரிசி ஆலை விற்பனைக்குஉண்டு. தொடர்பு கொள்ளவும் இல. 50, C/o உதயன். (10583)

### கோழிக் குஞ்சு விநியோகம்

UPLANDS FARM

(Cobb) இன புறொயிலர் குஞ்சு 25-04-1989) செவ்வாய்க்கிழமை சகாய விலைக்கு விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். [புகையிரத நிலையத்திற்கு அண்மையில்] (10580)

### கோழிக்குஞ்சு விநியோகம்

UPLANDS FARM

(Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சு, கறுப்புசேவல் குஞ்சு (18-4-89) செவ்வாய்க்கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். [தடுப்பூசி போடப்பட்டது.) முன்கூட்டியே பதிவுசெய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) (134)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler பேட்டுக்கோழி சேவல், குப் குஞ்சு விருத்துக் குஞ்சு வகைகள் எப்பொழுதும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் ஒழுங்கை முகப்பிலும் எங்கள் பண்ணை வாசலிலும் Nallur Video Centre என்னும் விளம்பர பலகை உண்டு. Nallur Farm Centre 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி-2087)

### ENGLISH TUITION

வீட்டிற்கு வந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும். வயதுவந்தவர்கள், மாணவர் யாவருக்கும். தொடர்பு: C. K. மகாலிங்கம், c/o K. கனகசபாபதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். [165]

### SCOOTER WANTED

Bajaj or Vespa in good condition Jeyarajasingham, Co operative Inspector, Saeil House, Manipay Road, Uduvil. (10563)

### தேவை

உதவிஏஜெண்டுகள் - பெண்கள் மாதம் ரூபா 1600-2400 வரை கொமிஷனுக பெறவழி உண்டு. எவரும் விண்ணப்பிக்கலாம். நேரில் ஆபீஸ் வந்து விபரங்களைப்பெற்றும், பெயர்களைப் பதிவுசெய்யலாம். ராஜா ஏூர்ஸ், 168/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (119)

யாழ்நகரிலுள்ள பிரபலமான நகைக்கடை ஒன்றுக்கு சகல நகைவேலைகளும் தெரிந்த நகைத் தொழிலாளி ஒருவர் தேவை. விண்ணப்பதாரர் பிணைப்பணம் செலுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும். முழுவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும். 484, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (124)

### தவறிவிட்டது

சி. வல்லிபுரம் ஆசிரியர் ஆகிய எனது பங்குனி மாத பென்சன் வவுச்சர், N.P.T.S கணக்குப் புத்தகம் ஆகியன செட்டித்தெரு ஒழுங்கையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கைலாச பிள்ளையார் கோயில் மணிக்குருக்களிடம் ஒப்படைக்கவும். (10581)

### வகுப்புகள்

Join Engineering Society G. C. E (A/L) பொறியியல் பரீட்சைக்குத் தோன்றிய ஆங்கில அறிவுடையவர்களுக்கு அரிய சந்தர்ப்பம். உடனே தொடர்பு கொள்ளுங்கள்; Civil Engineering Technological Services, 53, A. V. Road, Jaffna. [10561]

### கோழிக்குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளை சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் Hy - line கறுப்பு வெள்ளை, Silver பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய்/ புதன்கிழமைகளில் பெற்றுக்கொள்ளலாம். தடுப்பு மருந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளில் கொடுக்கப்படும். C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [சி/2088]

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும். தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

### உங்கள் சேவை

மூன்று மொழிகளில், றபர் ஸீல்கள், பிளாஸ்டிக் பெயர்கள், விளம்பர போட், கிறெக், ஸ்கூல் பட்ஜ் யாவும் உடன் செய்துகொள்ள அலன் றபர் ஸீல்' 40A, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். குறிப்பு: வேலைகள் பயில ஆர்வமுள்ள பெண்கள் விண்ணப்பிக்கவும். (10520)

### For Sale

C 70 Honda 84 sri second owner; air conditioner excellent condition Rs. 8750/- Sony tuner amplifier with speakers 40/40w; Centric electric water pump for sale. Contact No.7 Nicholas lane Kachcheri Nallur Road. (150)

### வகுப்புகள்

Indian Blouse Making and Dress Making இலகுவான முறையில்பயிற்றுவிக்கப்படும். எல்லா வயதினருக்கும் ஏற்ற Blouse Blocks கொடுக்கப்படும். Cake Icing & Hair-style துரிதமான நவீன முறையில் பயிற்சிகளுடன் நடைபெறும். 128, Arasady Rd Hindu Ladies Collegeக்கு முன்பாக Jaffna. (157)

### புத்தகம்

''நான்'' வெளியீட்டு வரிசையில் T. M. அன்ரனிப்பிள்ளை L.L.B. எழுதிய ''Easy English'' [இலகுவான ஆங்கிலம்] பகுதி III வெளிவந்துள்ளது. ஆங்கிலத்தை இலகுவாக கற்பதற்கு துணை நூலாக பகுதி I (தமிழில் விளக்கத்துடன்), பகுதி II [இலக்கண விளக்கத்துடன்] பகுதிIII (வினுவிடைகளுடன்) கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, வஸ்தியான் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (144)


## பாடசாலையின் திறமைக்கு காரணகர்த்தா அதிபரே

### ஓய்வுபெற்ற 12 அதிபர்களின் பாராட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஏப்ரல்,16

''ஒருபாடசாலையின் செயற்திறன்கள் அனைத்திற்கும் காரணகர்த்தாவாக விளங்குபவர் அதிபரே. மாணவர்களின் வாழ்க்கைத் திறனைத் தீர்மானிக்கும் செல்வாக்கு மிக்க சக்தியும் அதிபரே. ஒரு சமூகத்தில் அதிக செல்வாக்குமிக்கவரும் அவரே''

நல்லூர் கல்வி வட்டாரப் பாடசாலைகளில் அதிபர்களாகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற பன்னிருவருக்கு நல்லூர் அதிபர்கள்சங்கம்அளித்த பாராட்டு விழாவில் தலைமை உரையாற்றும் பொழுது கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சிவநாயகமூர்த்தி மேலும் பேசுகையில்; நல்லூர் வட்டாரத்தில் பல ஆண்டுகளாக நற்சேவையாற்றி ஓய்வு பெறும் அதிபர்களின் கடமைகள் சாமான்யமானது அல்ல. இவர்கள் தமது வாழ்க்கையையே அர்ப்பணித்து பாடசாலைகளின்வளர்ச்சிக்காகஆற்றியசேவைகளை நாம்என்றென்றும் நினைவுகூறக் கடமைப்பட்டுள்ளோம் என்றார்.

ஓய்வுபெற்ற பன்னிரண்டு அதிபர்களாகிய கொக்குவில் ஞான பண்டித வித்தியாசாலை அதிபர் திருமதி க. தர்மலிங்கம், பெரியபுலம் மகாவித்தியாலய அதிபர் திரு.வே. சிவபாலசிங்கம், அரியாலை தமிழ் பாடசாலை அதிபர் திரு. க. பாலசிங்கம், ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் பாடசாலை அதிபர் திரு. ச. கைலாசபிள்ளை, கல்வியங்காடு இந்து தமிழ் வித்தியாசாலை அதிபர் திரு.எம். முத்துக்குமாருகொக்குவில் மேற்கு சி.ச.க. பாடசாலை அதிபர் திருமதி சி.சிங்கராசா, திருநெல்வேலி றே.க. பாடசாலை அதிபர் திருமதி ப. பரமநாதன், செட்டித்தெரு மெ. மி. பாடசாலை அதிபர் திரு. மு. கனகரத்தினம், நாமகள் வித்தியாலய அதிபர் திரு. ச. சரவணபவான், செங்குந்தா வித்தியாலய அதிபர் திரு. வீ. அரியநாயகம், முத்துத்தம்பி வித்தியாலய அதிபர் திரு.எம். முத்துலிங்கம், வண்ணார்பண்ணை வைத்திலிங்கம் வித்தியாலய அதிபர் திரு. க. பிஞகபாணி ஆகியோரின் சேவைகளைப் பாராட்டி பலரும் உரையாற்றினார்கள்.

ஓய்வுபெற்ற அதிபர்கள் தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டல்களுக்கு நன்றிதெரிவித்தனர். (ச)

## பாராட்டு விழா

வேலணை ஏப்ரல் 16

கந்தபுராண வரலாற்றுச் சுருக்க நூலை எழுதிய வேலணையூர் பண்டிதர் மா. மாணிக்கத்துக்கு வேலணை தேவிக் கோட்டம் சனசமூக நிலைய ஆதரவில் பாராட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3. 00 மணிக்கு வேலணை கிழக்கு மகாவித்தியாலய மண்டபத்தில் டாக்டர் சி. இராசரெத்தினம் தலைமையில் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் நல்லை ஆதீன குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், பண்டிதர் மாணிக்கம் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்துவார்.

விழாவில் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. சி. சடாட்சர சண்முகதாஸ், யாழ். பல்கலைக் கழக தமிழ் துறையைச் சேர்ந்த கலாநிதி நா. சுப்பிரமணியன், திரு. ச. சத்தியசீலன், திரு. எஸ். சிவலிங்கராசா பலர் பாராட்டுரை வழங்குவார்கள். [சு-167]

## முல்லைத்தீவு மாவட்டத்திற்கு புதிதாக28கிராமசேவையாளர்கள்

ஒட்டுசுட்டான் ஏப் 16

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சமநல சேவை நிலையங்களில் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றி வந்த 28 பேரும் உள்நாட்டு அலுவலக அமைச்சினுல் கிராம சேவை அலுவலகர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

புதிதாக நியமனம் பெற்ற கிராமசேவை அலுவலர்கள் வருமாறு:-

ஏ. சுந்தையா, ஏ. எல். எம். யுனைட், ஆர். குலேந்திரன், எம். சின்கார், எஸ் சங்கரலிங்கம், கே. விஜயேந்திரன், கே. எஸ் அந்தோனிப்பிள்ளை, எஸ் சுப்பிரமணியம், கே. ஜெகதீஸ்வரன், எம். மரியநாயகம் எஸ். தருமராசா, ரீ. ஜெயதாஸ், எம். சுவாமிநாதன், எம். எஸ். நவரத்தினம், ரீ. சிவராசா, எஸ். எஸ். பாலச்சந்திரன், பீ. சிவசுப்பிரமணியம், கே. சற்சிதானந்தமூர்த்தி கே. சண்முகராசா, எஸ். குமரகுருநாதன், கே. ஆனந்தராசா, வி. கிருஷ்ணராசா, வீ. எஸ். செல்வராசா, எஸ். கிருஷ்ணராசா, ப. இரத்தினசிங்கம், எஸ். கனகரத்தினம், வீ. இராசரத்தினம் எஸ். தெய்வேந்திரம்பிள்ளை.

தற்பொழுது கடமையாற்றி வரும் அவ்வப் பகுதி கிராம சேவை அலுவலர்களிடம் புதிதாக நியமனம் பெற்றவர்கள் ஆரம்ப பயிற்சியை பெறுவார்கள்.

இதுவரைகாலமும் பயிர்ச்செய்கை உத்தியோகஸ்தர்கள் செய்து வந்த கடமைகளை அவர்கள் தொடர்ந்து செய்யுமாறு முல்லை அரசாங்கஅதிபர் பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-113)

## பருளை வீதி

சுழிபுரம், ஏப்ரல் 16

சுழிபுரம் பருளை வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் இருப்பதால் மக்கள் பெரும் கஷ்டத்துக்கு உள்ளாகின்றனர். (சு-28)

## மானி. இந்து முறைசாராக் கல்வி பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெற்றுவரும் முறைசாராக் கல்வியின் (படவரைஞர், தட்டச்சு] 1989 ஆம் ஆண்டுப் பரீட்சைகள் 20ஆம், 21ஆம் திகதிகளில் நடைபெறும் எனக் கல்லூரி அதிபர் தெரிவித்திருக்கிறார். (ச)


## ★ உடன் தேவை ★

### 1. அலுவலகப் பீயோன் (Peon)

உதயன் அலுவலகத்தில் பணிபுரிவதற்கு மேற்கண்ட பதவிக்கு இருவர் தேவை.

முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

அனுபவம் இல்லாதவர்கள் சுறுசுறுப்பு உள்ளவர்களாகவும், எந்தப் பணியையும் செய்வதற்கு விருப்பம் உள்ளவர்களாகவும் இருத்தல் அவசியம்.

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பப்படுவர்.

நற்சான்றுப் பத்திரங்கள் இரண்டுடனும், கல்விச் சான்றிதழ்களுடனும் நேரில் வரவும்,

### 2. வான் சாரதி

பலவருட அனுபவமும், நற்குணங்களும் உடைய வான் சாரதி ஒருவர் தேவை.

திடகாத்திரமான உடம்பும் ஆரோக்கியமும், யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் வசிப்பவராகவும் இருப்பவருக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

முன்னர் பணிபுரிந்த இருவரிடம் பெற்ற நற்சான்றிதழ்கள், சாரதி லைசென்ஸ் என்பவற்றுடன் நேரில் வரவும்.

முகாமையாளர் (ஆளணி & நிர்வாகம்),
நியு உதயன் பப்பிளிக்கேஷன்ஸ்
பிறைவேட் லிமிட்டெட்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## அஞ்சலி



மலர்வு: 07 | 07 | 1968

உதிர்வு: 12 | 04 | 1989

### ச. சிவராசா (ஜெனு)

ஜெனு ஜெனு என்னும் சாற்றரும் செல்வ, நின்
நினைவிற் கொண்டாய் தமிழ் மண்தன்னை
மின்னி மறைந்தாய் விண்பதி புகுந்தாய்
நின்னரும் தியாகம் நினைத்திடற் கரிதோ
வழி வழி வந்த மாசிலா நின் வீரம்
ஊற்றுய் உனது உதிரத்துறைந்தது
அப்பெரும் பரிசே ஆண்மையே வடிவாய்
செப்பரும் சாதனை சிறப்புடன் புரிந்து
நடுகல் நாட்டும் நற்பெரும் பேற்றை
படுகளத் தெய்தி சடுதியில் மறைந்தாய்
நின்னரும் பணிகள் நீணிலத்தென்றும்
தொடரும் இதை நீ சுவர்க்கத்தில் காண்பாய்!

குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்.

வல்வெட்டித்துறை.
வரணி.

(166)


## ★ A/L 89 ★

● தூயகணிதம்
தளக்கேத்திர கணிதம் (Place)
திண்மகேத்திர கணிதம் (Solid)

● பிரயோக கணிதம்
எளிமை இசை இயக்கம் (S.H.M)

ஆரம்பம்: 17-04-89
திங்கள் காலை 6.15 a.m

● ஆசிரியர்: திரு. கிருஷ்ணு (B.Sc)

NIRU TUITION CENTRE
Kondavil West
KONDAVIL.

[சி-2256]

கப்பலில்

## ★ வேலை வாய்ப்புக்கள் ★

நான்கு கிரேக்க கப்பல்களில்
● உடனடி வேலை வாய்ப்புக்கள் ●

| | |
|---|---|
| 2nd Officers | Bosan |
| 3rd Engineer | Oiler |
| Radio Officers | AB |

மேற்காணும் பதவிகளுக்கு செல்ல விரும்புவோர் உடனடியாக வந்து தொடர்பு கொள்ளவும்.

✶ இத்தாலி ✶ பிரான்ஸ் ✶ ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்குப் போவதற்கும் உடனடிப் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:

நாஷனல்
சிப்பிங் அன்ட் ரவல்ஸ்
நியூ லலிதா பில்டிங்,
185/2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-2258]


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### சபாபதி நாகராசா (நாகேந்திரம்)

(அதிபர், சங்கானை விநாயகர் அரிவுத் தொழிற்சாலை)

தாயின் மடியில்: 08 - 04 - 1930

இறைவன் திருவடியில்: 08 - 05 - 1987

திதி: 16 - 04 - 1989 (ஞாயிற்றுக்கிழமை)

அன்பின் திருவுருவே! பாசத்தின் பிறப்பிடமே! தானதருமம் ஆனவர்க்கெல்லாம் வாரி வழங்கிய பாரி வள்ளலே! எம்வாழ்வின் கலங்கரை விளக்கே! காலமெல்லாம் ஆதரவற்றவர்களுக்கு ஆல மாமரமாய் நின்று அருள் நிழல் தந்து காத்த எம் அன்புத் தெய்வமே! தாங்கள் எம்மை விட்டுப் பிரிந்து இன்றுடன் ஓராண்டு பூர்த்தியாகி விட்டதே! ஓராயிரமாண்டு கடந்தாலும் உங்கள் திருமுகம் எம் மனங்களிலிருந்து மறையாது. தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தங்களை என்றும் மனதில் வைத்துப் பூஜிக்கும்.

மனைவி, மக்கள், மருமக்கள், உறவினர்.

விநாயகர் அரிவுத்தொழிற்சாலை,
'அன்னை இல்லம்'
பிரதான வீதி, சங்கானை.

[167]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிறந்த விளையாட்டு மைதானம் இல்லாத குறை நீங்கிவிட்டது

## முல்லை அரசாங்க அதிபர் உரை

முல்லைத்தீவு ஏப்.16

முல்லைத்தீவு மாவட்டத்தின் தலைப்பட்டினமாக உள்ள முல்லைத்தீவில் ஒரு சிறந்த விளையாட்டு மைதானம் தேவை என்று முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபரும், ஆசிரியர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க நானும் திட்டமிடல் பிரதிப்பணிப்பாளரும் சேர்ந்து பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இருந்து மைதானப் புனரமைப்புக்கு ரூபா 1லட்சத்து 60ஆயிரம் வழங்குகின்றோம். இன்று மைதானத்தைத் திறந்து வைப்பதில் பெருமை அடைகின்றேன். சிறந்த விளையாட்டு மைதானம் இல்லாத குறை நீங்கிவிட்டது.

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தின் புனரமைப்புச் செய்யப்பட்ட விளையாட்டு மைதானத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினர்.

முல்லைத்தீவு ம. வி. அதிபர் முல்லைமணி திரு. வே. சுப்பிரமணியம் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. இ. தர்மகுலசிங்கம், பிரதம கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா, இலங்கை வங்கியின் மாவட்ட முகாமையாளர் திரு. ந. சிவன் ஆகியோரும் சிறப்பு உரைகளை வழங்கினர்.

ஆரம்பத்தில் வித்தியாலய மாணவிகளின் அணிநடையை ஏற்றுக் கொண்ட அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் வித்தியாலயக்கொடியை ஏற்றிவைத்து விழாவை ஆரம்பித்துவைத்தார்.

விழாமுடிவில் முல்லை. ம. வி. விளையாட்டுத்துறை ஆசிரியர் திரு. எம். தேவராசா நன்றி உரை வழங்கினர். (இ-92)


## வெற்றிடங்கள்

### தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள்

யாழ்ப்பாணத்தில் போல்டுகள், நட்டுகள், கம்பி ஆணிகள், அழுத்த வேலைப் பொருள்கள் [Press Items] தயாரிக்கும் ஒரு கைத்தொழில் நிலயத்திற்கு கீழ்க் காண்போர் உடனடியாகத் தேவை.

1. கணக்குப் பதிவாளர் (Book Keeper)
2. வேலை மேற்பார்வை உத்தியோகத்தர்
3. மெஷின் இயக்குநர்கள்
4. இரும்பு வேலை செய்வோர் -வார்ப்பு வேலை செய்வோர் [கொல்லர்]
5. இயக்குநர் பயிற்சியாளர்கள்
6. வெல்டர்கள்
7. General Fitters
8. லொறிச் சாரதி

விண்ணப்பதாரர்கள் பொருத்தமான கல்வித் தராதரமும் அனுபவமும்முடையவர்களாக இருக்க வேண்டும்.

**சான்றிதழ்களின் பிரதிகளுடன் 21-4-1989 அன்று அல்லது அதற்கு முன் விண்ணப்பிக்கவும்.**

480, C/o UTHAYAN

[94]


# நல்ல காலம் வருகிறது!

# கைத்தறி நெசவாளருக்கு!!

## அரச ஸ்தாபனங்கள் தமது தேவை முழுவதையும் அவர்களிடமே வாங்கும்

கொழும்பு, ஏப்ரல் 16

அமைச்சுகள் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் யாவும் தமக்குத் தேவையான குறிப்பிட்ட சில வகைப் புடைவைகளை உள்ளூர் கைத்தறி நெசவாளர்களிடம் இருந்தே வாங்க வேண்டும் என்று கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

உள்ளூர் கைத்தறி நெசவாளர்களிடம் இருந்து எந்தெந்தப் புடைவை வகைகளை வாங்க வேண்டும் என்றும் கிராமியகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

திரைச் சேலைகள், படுக்கை விரிப்புகள், பஞ்சுறைகள், அணி மணிகள், துடைப் பத்துரிகைகள், சிறைக் கைதிகளின் உடைகள், மருத்துவமனை நோயாளரின் உடைகள் ஆகியவையே அமைச்சினுல் அறிவிக்கப்பட்டுள்ள புடைவை வகைகள் ஆகும்.

பிரஸ்தாப புடைவைவகைகள் தேவைப்படும் பட்சத்தில் அவற்றை உள்ளூர் கைத்தறி நெசவாளர்களிடம் இருந்தே வாங்கவேண்டும் என்று அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் சபைகளுக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுக் கொள்ளப்பட்ட கைத்தறி நெசவாளர் நிறுவனங்களின் பட்டியல் அமைச்சிடம் உள்ளது.

இந்தப் பட்டியலைப் பெற்று கேள்விகளைக் கோருவது மூலம் பிரஸ்தாப பொருள்களைக் கொள்வனவு செய்யலாம் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் திறைசேரி இது தொடர்பாக அறிவித்துள்ளது. (இ-7)



மக்கள் கடன் வழங்கும் திட்ட அலுவலகம் அண்மையில் நெல்லியடியில் திறந்து வைக்கப்பட்டது.

நெல்லியடி இலங்கை வங்கிக்கிளையின் மக்கள் கடன் வழங்கும் திட்ட முதல் முகவர் திரு. எம். நாராயணமூர்த்தியிடம் யாழ் மாவட்ட இலங்கை வங்கி முகாமையாளர் திரு. க. கணேசமூர்த்தி மக்கள் கடன் வழங்கும் திட்ட கையேடு ஒன்றை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

நெல்லியடி இலங்கை வங்கி முகாமையாளர் திரு. வே. தில்லைநாதன் கடன் வழங்கும் திட்டத்தின் தொடர்பதிகாரி திரு. கே. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (இ-70)

## கல்விமான்களை உருவாக்க நூலகங்கள் உதவ வேண்டும்

பச்சிலைப்பள்ளி, ஏப்ரல் 16

''நூல் நிலையங்களில் பணிபுரிவது ஒரு புனித தொண்டாகும். நூல் நிலையங்கள் பல அறிஞர்களையும் பல்துறை நிபுணர்களையும் உருவாக்குகின்றன. நூல் நிலையங்களில் கடமையாற்றும் நூலகர்கள் நாட்டில் சிறந்த கல்விமான்களை உருவாக்கத் துணைபுரிய வேண்டும்.

சாவகச்சேரி நகரசபை பொதுநூல் நிலையத்தில் கடமையாற்றி மன்னர் பிரதேச சபை மாந்தை உப அலுவலக பொது நூல் நிலய நூலகராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்ற ந. ஸ்ரீகாந்தாவுக்கு நகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினுல் ஒழுங்கு செய்யப்பட்ட பிரிவுபசார விழாவில் தலைவர் த. நவரத்தினராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்,

இவ்விழாவில் வ. சிவபாலசுந்தரம், செ. சுந்தரலிங்கம், திருமதி சு. சதாசிவமூர்த்தி உட்பட பலர் உரையாற்றினர். (க-117)

## திறந்து வைத்தார்

கொடிகாமம் நாவலடி அ. த. க. பாடசாலை பெற்றோர் அபிவிருத்திச் சபையின் முயற்சியால் நிர்மாணிக்கப்பட்ட 20 ஆயிரம் ரூபா பெறுமதியான மண்டபத்தை அபிவிருத்திச்சபைச் செயலாளர் பண்டிதர் வே. நடராசா சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். [க-75]

## ரூபா 73 லட்சம் ஒதுக்கீடு

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்குத் தளபாடங்கள் செய்வதற்காக 73லட்சம்ரூபா நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. [ஒ-144]

## ஜனுதிபதி பிரேமா 'சுசரித்த'விலேயே வசிப்பார்

கொழும்பு ஏப் 16

ஜனுதிபதி பிரேமதாஸ தனது சொந்த வாசஸ்தலமான 'சுசரித்த'வில் வசிப்பார்.

உத்தியோக அலுவல்களுக்கு மட்டுமே ஜனுதிபதி மாளிகை பயன்படுத்தப்படும் என்று ஜனுதிபதி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

'சுசரித்த வாசஸ்தலம் பாதுகாப்பற்றதாக இருப்பதாகக் கூறப்பட்டதற்கு''மக்கள் மத்தியில் வாழ்வதே எனக்கு பாதுகாப்பாக இருக்கும்'' என்று ஜனுதிபதி குறிப்பிட்டதாகச் சொல்லப்பட்டது. [ஒ-எ]

## குறைந்த செலவில் மின் வழங்கும் திட்டம்

பொதுமக்களுக்கு குறைந்த செலவில் மின்சாரம் வழங்கும் புதிய திட்டம் ஒன்றை மின்சார, எரிசக்தி அமைச்சு அமுல்படுத்த உள்ளது.

அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேராவின் யோசனைக்கு அமைய இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

ஒருங்கிணைந்த தேசிய சக்தி வளத்திட்டத்தின் கீழ் மின்சக்தி உற்பத்திக்கு மாற்றுவழியாக சூரியசக்தி, உயிரியல் வாயு, காற்றூடி நிலையங்கள், சிறிய நீர்ப்பாசன நிலையங்கள் ஆகியன பயன்படுத்தப்படும்.

இவற்றின் மூலம் பெறப்படும் மின்சாரம் தூரஇடங்களில் உள்ள கிராமங்களுக்கு வழங்கப்படும். (ஒ-எ)

## பஸ்சேவை மீண்டும் ஆரம்பம்

பச்சிலைப்பள்ளி ஏப்ரல் 16

நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கிளாலி-யாழ்ப்பாணம் பஸ்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதை ஒட்டி இப்பகுதி மக்கள் வ. பி. போ. சபைக்கு நன்றி தெரிவித்துள்ளனர். [க-117]


## Modern Commerce Institute

Vallipuram Lane, POINT PEDRO.

A/L 91

**கலை, வர்த்தகப் பிரிவு ஆரம்பமாகிவிட்டன.**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. S. K. ஸ்ரீரங்கநாதன் B. Com (Hons) |
| அரசியல் | — | திரு. S. மனோகரன் B. A. (Hons) |
| கணக்கியல் | — | திரு. S. நந்தகுமார் B. Com. (Hons) |
| வர்த்தகம் | — | திரு. S. நந்தகுமார் B. Com. (Hons) |
| அளவையியல் | — | திரு. S. பவான் B. A. |
| தமிழ் | — | திரு. T. சோமாஸ் B. A. |
| இந்துநாகரிகம் | — | திரு. N. யமுனு B. A. (Hons) |

**A/L 89, 90 ஆம் ஆண்டிற்கான வகுப்புக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.**

**ஆண்டு 7, 8, 9; 10, 11 ஆம் வகுப்புக்களும் தனித்துவம்வாய்ந்த ஆசிரியர்களினுல் கற்பிக்கப்படுகின்றன.**

| | | |
|---|---|---|
| கணிதம் | — | திரு. ராஜரட்ணம் |
| ஆங்கிலம் | — | திரு. ரட்ணம் |
| தமிழ் | — | திருமதி விஜயா |
| சமூகக்கல்வி | — | திரு. விஜயநாதன் |
| விஞ்ஞானம் | — | திரு. பொன்னம்பலம், திரு. இராமகிருஷ்ணன் |
| வர்த்தகமும் நிதியும் | — | திரு. சிவலிங்கம் |

**கலை, வர்த்தக O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்**

● மொடெர்ண் கொமெர்ஸ் ●

கல்வி நிலையமேயாகும்.

[10534]



## கொம்பியூட்டர் பயிற்சி

Diploma in Data Processing & Computer Programming Course

புதிய பிரிவுகள்:

BASIC : 26-04-89 (Week day) 10.00a.m
ADVANCED BASIC : 29-04-89 (Weekend) 1.00p.m

**1st Payment Rs. 500/-**

IBM SUPER/XT, IBM COMPATIBLE, APPLE உட்பட பல நவீன Computerகளில் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு அங்கீகாரம்பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.

✶ மல்லாகம் கிளையிலும் சில பிரிவுகள் 4.00 மணிக்கு ஆரம்பமாகும்.

IDP **Computer Centre,**
342, K.K.S. Road, Jaffna.
(சிவன் கோயிலடி)
Branch: 7th Mile Post, Mallakam.

[சி-2266]


# பரீட்சை முடிவுகளால் மாத்திரம் பாடசாலை தரத்தை மதிப்பிட முடியாது

## பண்டத்தரிப்பு கொத்தணி அதிபர் பேச்சு

சுழிபுரம், ஏப்ரல்.16

ஓர் பாடசாலையின் தரத்தை பரீட்சை முடிவுகளினுல் மதிப்பிட முடியாது. புறக்கிரியையாக நடைபெறும் காரியங்கள் செயல்பாடுகள் மூலமாகவும் மதிப்பிடவேண்டும். நல்ல தரமான விளையாட்டுப் போட்டியை நடத்தியதன் மூலம் இப்பாடசாலை பல காரியங்களை செய்யும் ஆற்றலை நிறைய உடையது என்பதைக் காட்டியுள்ளது.

சித்தன்கேணி கணேச வித்தியாலய வருடாந்த இல்லப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பண்டத்தரிப்பு கொத்தணிப் பாடசாலைகளின் நிர்வாக அதிபர் திருமதி தே. தம்பிராசா மேற்கண்டவாறு கூறினர்.

வித்தியாலய அதிபர் திரு. க. நல்லையா தலைமையில் போட்டிகள் நடைபெற்றன.

வலிகாமம் மேற்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்தியலிங்கம் பாடசாலைக் கொடியை ஏற்றி விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், ''சிறிய பாடசாலையாக இருந்தாலும், பெரிய பாடசாலைகளின் தரத்தை ஒத்த விளையாட்டுப் போட்டியை காணும் வாய்ப்பை நான் பெற்றுள்ளேன்.

இப்பாடசாலைக்கு வசதியான கட்டடம், விளையாட்டு நிலம், மற்றும் வசதிகள் இல்லாமல் இருப்பது ஓர் பெரும் குறையாகும் என்றுர்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குவட்டுக்கோட்டையயன் கழகத் தலைவர் தலைவர் திரு. க. அருணுசலம் பரிசுகளை வழங்கினர்.

போட்டிகளில் கலைமகள் இல்லம் மூன்றாவது இடத்தையும். மலைமகள் இரண்டாவது இடத்தையும், அலைமகள் இல்லம் மூன்றாவது இடத்தையும் பெற்றன.

பாடசாலை அபிவிருத்திச் சபை செயலாளர் திரு. அ. நடராஜன் நன்றியுரை கூறினர். (க-28)

## மன்னரில் ஏழை மாணவருக்கு பாடசாலை உபகரணம்; சீருடை

மன்னுர், ஏப். 16

மன்னுர் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் இந்த ஆண்டில் கொழும்பு சிறுவர் பராமரிப்பு நிலையம், யாழ். அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் ஆகிய நிறுவனங்களின் உதவியுடன் மன்னுர் மாவட்டத்தின் எல்லைக்கிராமங்களில் வாழும் ஏழை மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள், சீருடைகள் ஆகியவற்றை விநியோகம் செய்தது.

மன்னுர் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் தலைவர் வண. பிதா. அ. சேவியர் குரூஸ் இந்து முஸ்லிம் கிராமங்களான இலுப்பைக்கடவை, பொற்கேணி, சிலாவத்துறை போன்ற பகுதிகளில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள், சீருடைகளை இப்பகுதிப் பாடசாலை அதிபர்கள் ஊடாக வழங்கினர்.

அத்துடன் துயர்துடைப்புச் சங்கம் பெற்றோர்களை இழந்த மாணவர்களுக்கு விடுதி வசதியுடன், கல்வி கற்பித்தல் ஒரு சிலரை யாழ். மாவட்டத்துக்கு அனுப்பிக் கல்வி புகட்டுதல், மாணவர்களின் கல்விச் செலவுக்காகச் சேமிப்பு வங்கியில் பணத்தை இடல்போன்ற உதவிகளையும் செய்துவருகின்றது.

இந்தியாவிலிருந்து திரும்பிய மாணவர்களுக்கு மேலதிகபயிற்சியை அளித்தல், பாலர் பாடசாலைகளை ஆரம்பித்தல், ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளை ஆரம்பித்தல், மாணவர்களுக்குப் பல்கலைக்கழக மாணவர்களின்உதவியுடன் மீட்டற் பயிற்சிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியன இச்சங்கம் மேற்கொண்டு வரும் சேவைகளாகும். (ஏ)


அருட்சகோதரர் கில்லறி ஜோசப் ஞாபகார்த்த

## சிறுர் பராமரிப்பு இல்லம்

### கீரி, மன்னுர்

இவ் இல்லத்தில் தாய் தகப்பன் இல்லாத றோமன் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த பிள்ளைகள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். 6 ஆம் ஆண்டு கல்வி கற்கும் மாணவர்களாக இருக்கவேண்டும். இவர்களுக்கு இந்த இல்லத்தில் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும். ஆறு மாணவர்கள் மாத்திரமே சேர்த்துக்கொள்ளப்படுவர். இவர்கள் தெரிவு திறனுய்வுப் பரீட்சை மூலமே தெரிவு செய்யப்படும். இதற்கு விண்ணப்பம் அனுப்புபவர்கள் முழு விபரத்தையும் 20-04-1989க்கு முன்னதாக விண்ணப்பித்தல் வேண்டும். திறனுய்வுப் பரீட்சை 23 - 04 - 1989 ஆம் திகதி 10 மணியளவில், மன்னுர் புனித டிலாசால் இல்லத்தில் நடைபெறும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

இயக்குனர்,
புனித டிலாசால் இல்லம்,
மன்னுர்.

[151]



## வெளிநாடு செல்லவிருக்கும் வடபகுதி இளைஞர்களுக்கு

## அரியதோர் சந்தர்ப்பம்

● ஜேர்மனி ● பிரான்ஸ் ● ஹொலண்ட்

ஆகிய நாடுகளுக்கு விசாவுடன் கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாண ஒழுங்குகள் ஒரு வாரத்தில் செய்து கொடுக்கப்படும்.

முதலில் தொடர்பு கொள்ளும் இருபத்தைந்து பேர்களுக்கு மட்டும் முதல் வாரத்திலேயே பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

குறிப்பு: இப் பிரயாண ஒழுங்குகள் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டு

பெண்களுக்கு: முப்பது வயதுக்கு மேற்பட்ட மூன்று பெண்களுக்கு மட்டுமே குறிப்பிட்ட நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் முதல் வாரத்தில் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகள்:

யாழ்ப்பாணத்தில்
K. பரமநாதன்,
இல.13-ஆஸ்பத்திரிவீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

கொழும்பில்:
Dakhas Enterprises,
No.7, 2nd Floor,
Colombo Central Super Market,
Colombo - 11.
Telephone No 545960.

[10582]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலுவலகம் இயங்கவில்லை

திருகோணமலை, ஏப்ரல் 16
கடந்த 10ஆம் திகதி முதல் மூடப்பட்ட திருமலை உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் இன்னும் இயங்கத் தொடங்கவில்லை.

கடந்த 10ஆம் திகதி பூஸா விலிருந்து விடுதலையானவர்கள் தமக்கு 2ஆம் கட்ட நிவாரணத்தை உடன் வழங்கக் கோரி காரியாலயத்திற்குள் புகுந்து ஆர்ப்பாட்டம் நடத்தியது தெரிந்ததே. [ஒ-150]

# ஷப்ரு - சென்றலைட் நீல அணிகள் முதல்நாள் ஆட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16
ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் பெவின் சுலா குறூப்பின் ஆதரவுடன் நடத்தப்படும் கிரிக்கெட் போட்டிகளில் 13 ஆம் திகதி காலை நடைபெற்ற ஆட்டத்தில் சென்றலைட் [சொக்] அணியை எதிர்த்து ஆடிய ஷப்ரு விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட் அணி மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.

சுரேந்திரஜித் 47, முகுந்தன் 45, உதயகுமார் 13, சதீஸ் ஆட்டமிழக்காமல் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் எஸ். பி. எஸ். இளங்கோ 2 விக்கெட்டுக்களையும், அன்றூ கிறேஷியல், சுரேஸ், பிரபானந்தன் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் ஆடிய ஷப்ரு அணி 23 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது.

அன்றூ கிறேஷியன் 31, விஜயகுமார் 29, பிரதீபன் 26, எஸ். பி. எஸ். இளங்கோ 17, முருகவேள் 11, ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் சசிதரன், ரமேஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் முகுந்தன், ராஜ்குமார், பாலகுமார் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

### மாலையில்

மாலை நடைபெற்ற ஆட்டத்தில் மல்லாகம் றெட்ஸ்டார் அணியை எதிர்த்து ஆடிய செனறலைட் (நீல)அணி வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட் அணி 29 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது.

விக்னேஸ்வரன் 61, விவேகானந்தன் 24, மனோஜ்குமார் 19, ரஜீவன் 16, சிவச்சந்திரன் 11 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் மதி 2 விக்கெட்டுக்களையும் பொன்விலியஸ், செல்வகுமார், ஞானேஸ்வரன், சிறீகாந்த், கேதீஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பின்னர் துடுப்பெடுத்தாடிய மல்லாகம் றெட்ஸ்டார் அணி 26.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றது.

கேதீஸ்வரன் 23, சதா 14, சிறீகாந் 17, பொன்விலியஸ் 11ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் விஜயநாதன் 4 விக்கெட்டுக்களையும், சண்முகலிங்கம் 3 விக்கெட்டுக்களையும், ரஜீவன் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர். (இ-6)

## ஸ்டான்லி-ஜொனியன் ‘பீ’

14 ஆம் திகதி அன்று காலை நடைபெற்ற ஆட்டத்தில் ஸ்டான்லி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆடிய ஜொலிஸ்டார் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்டான்லி விளையாட்டுக் கழகம் 22.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது.

ஜெறணி 51 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் செழியன் 4 விக்கெட்டுக்களையும், இந்திரநாத், டனியல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஜெகேந்திரன், இளங்கோ ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பின்னர் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்டார் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 91 ஓட்டங்களைப் பெற்றது.

க. இளங்கோ ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும் ஜெயராஸ் 16, திலீபன் 12, டனியல் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் கண்ணன் 3 விக்கெட்டுக்களையும், ஜெறணி, அருள்ச்செல்வன் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்கள்.

### மாலையில்

மாலையில் நடைபெற்ற ஆட்டத்தில் ஒல்ட் பற்றீசியன்ஸ் அணியை எதிர்த்து ஆடிய ஜொனியன் (பீ) விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது,

முதலில் துடுப்பெடுத்தாடிய ஒல்ட் பற்றீசியன் விளையாட்டுக்கழகம் 29.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றது.

செல்வராஜா 20 ஓட்டங்களையும், பனிஸ்டர், கிளஸ்டன், சகாயராஜா ஆகியோர் தலா 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அகிலன், ரகுராம் ஆகியோர் தலா 3 விக்கெடடுக்களையும் நிகால் வாகீசன் ஜெயசங்கர் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்கள்.

பின்னர் ஆடிய ஜொனியன்ஸ் அணி விக்கெட் இழப்பின்றி 84 ஓட்டங்களைப் பெற்றது. சுதாகர் ஆட்டமிழக்காமல் 31, சுதேஸ் ஆட்டமிழக்காமல் 24 பெற்றனர்.

## கண்டு எடுக்கப்பட்ட அடையாளக் கார்ட்டுகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16
கண்டெடுக்கப்பட்ட அடையாளக்காட்டுக்கள் உதயன் அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

உரியவர்கள் இலக்கம், 292/2 நாவலர் வீதியில் உள்ள உதயன் காரியாலயத்துக்கு நேரில் வந்து இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

1. 647652484V மரியநாயகம் மேரிகுணஸ்ரின், முரசுமோட்டை.
2. 622352923 V வின்சன் ஜோசப் அலெக்ஸ், யாழ்ப்பாணம்.
3. 640033134 V சபாபதி வேலுப்பிள்ளை, பூநகர், ஈச்சிலம்பத்தை.
4. 643512778 V செல்வராசா பாலச்சந்திரன், யாழ்ப்பாணம்.
5. 666632702 V நடராசா வையந்திமாலா, தாளையடி.
6. 496582985 V நாகேஸ்வரி கந்தையா, கொழும்பு – 13
7. 661831901V சுப்பிரமணியம் கந்தசாமி, வண்ணார் பண்ணை.
8. 392330305 V இராமநாதர் பாலசுப்பிரமணியம், சுழிபுரம்.
9. 181951109 X தம்பியப்பா சிவானந்தன், வந்தாறுமூலை.
10. 611582366 V சின்னராசா யோகராசா, சாம்பல் தீவு.
11. 633341176V முத்தன் வேலாயுதன் லோகேஸ்வரன், தெல்தெனிய.
12. 456430996V தேவபுஷ்பம் தேவதாசன், ஏழாலை.
13. 715090244 V பிரான்சிஸ் சேவியர் பிறீடா நிஷந்தினி, குருநகர்.
14. 490783318 X பவ்ளிஸ் அர்ஜேலிஸ், யாழ்ப்பாணம்.
15. 546861716 V சந்தியோகு ஜெஜேவா, இலுப்பைக்குளம், முதலிக்குளம்.
16. 603300580 X சிவக்கொழுந்து கந்தராசன், யாழ்ப்பாணம்.
17. 273471332 X கந்தையா விஞயகமூர்த்தி, களுப்பகாலே.
18. 472922734 V சிவசுப்பிரமணியம் கேசானந்தம், ஹெந்தலே.
19. 26130773V கதிரவேலு மருதை விஜயபுர.
20. 682571551 V அமிர்தநாதன் அல்போன்ஸ் அமிர்தராஜா, திருகோணமலே.
21. 536062793 X நித்தியலட்சுமி விஜயராசா, வண்ணார்பண்ணை.
22. 528360122 V இராசம்மா சபாபதி, பத்தமேனி இடைக்காடு.
23. 603601092V முருகுப்பிள்ளை குணேந்திரன், காங்கேசன்துறை.
24. 387061258V விக்னேஸ்வரி சிவபாலன், வண்ணார் பண்ணை.
25. 342981080V விநாயகமூர்த்தி இராசரத்தினம், காங்கேசன்துறை.

## நன்றி நவிலலும் நினைவு அஞ்சலியும்

### செல்வன் விக்னேஸ்வரன் பரராஜசிங்கம்

எமது சிரேஷ்ட புத்திரன் செல்வன் விக்கினேஸ்வரனின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்கள், சரீர உதவி புரிந்தவர்கள், அனுதாபச் செய்தி அனுப்பியவர்கள், விரும்பியே வேறு பல உதவிகள் செய்தவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு,

19-4-89 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் குடும்ப சமேதராய்க் கலந்து வைபவத்தைச் சிறப்பித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'பாக்கிய விலா'
கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

க. பரராஜசிங்கம்
பரமேஸ்வரி பரராஜசிங்கம்

(10527)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

### விஞசித்தம்பி பொன்னையா

சென்ற 19-3 89இல் சிவபதமடைந்த திரு. விஞசித்தம்பி பொன்னையா அவர்களின் வீட்டுக்கிரியை 19-4-89 புதன்கிழமை மு. ப. 10. 00 – 12. 00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், நண்பர்கள் குடும்பசகிதம் வருகைதந்து வைபவத்தைச் சிறப்பித்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். இறுதிக் கிரியைகளில் பங்குபற்றி எமது துயரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'இந்திரபதி'
நுணுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

மனைவி: பொ. ஞானம்மா
பிள்ளைகள்.

(சி/2274)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி தம்பிராசா கௌரிஅம்மா

(காந்திமதி)

தூல முகிழ்ப்பு: 22- 06- 1928
தூல அவிழ்ப்பு: 17- 03- 1989

தாயே!

தெய்வமாய் வந்த தேவி! உங்கள் இருப்பின் கனமும் கவனமும், உங்கள் இறப்புக்குப் பின்புதான் புரிகிறது. உங்கள் இல்லாமை எங்களைக் கொல்லாமல் விட்டதற்கு தங்கள் தாய்மையே காரணம் அம்மா!

தாய்மையாய் விளங்கித் தூய்மையாய் வாழ்ந்தவளே! எம்மை விட்டுப் பிரிந்து இன்றோடு முப்பத்தொரு நாட்கள் முடிந்தாலும் எங்கள் நெஞ்சு முடிச்சுகளில் நீங்கள் அவிழ்படாத ஆன்மா! அணையாத சுடர் விளக்கு!

மக்கள். மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்.

பணிக்கர் வளவு,
திருநெல்வேலி.

[162]

## பாடசாலையில் குடிதண்ணீர் பிரச்சினை

கிளிநொச்சி ஏப் 16
கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரி மாணவிகள் தங்களுக்குத் தேவையான குடி தண்ணீரை போத்தல்களில் கொண்டு வர வேண்டிய நிலைமையில் இருக்கின்றார்கள்.

பாடசாலையில் குடிதண்ணீர் இல்லாதது பற்றி எத்தனையோ தடவை கல்லூரி நிர்வாகம் கல்வித்திணைக்களத்துடன் தொடர்பு கொண்டும் பயன் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. [க-ரி)

## ஜனசவிய உறுப்பினர்


கோப்பாய் ஏப் 16
பிரதமரின்வறுமைநிவாரண ஒழிப்புத்திட்டத்தின் கீழ் அண்மையில் கோப்பாய் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் 5 உறுப்பினர்களை இப் பகுதி உணவு முத்திரையைப் பெறும் குடும்பங்கள் தெரிவு செய்தனர். இத்தெரிவு கோப்பாய் வடக்கு சரவணபவானந்தாவித்தியாலயத்தில் இடம் பெற்றது. (க-72)

## ஜனசவிய கருத்தரங்கு

கொடிகாமம் ஏப் 16
தென்மராட்சி கிழக்குப்பகுதி கிராம சேவை அலுவலர்கள் பிரிவுக்கான ஜனசவிய(வறுமை ஒழிப்புத்) திட்டக் கருத்தரங்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடை பெற்றது.

தென்மராட்சி உதவி அரசஅதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் வறுமை ஒழிப்புத் திட்டத்திற்குரியவர்களை தெரிவு செய்யும் முகவர் குழுவைச் சேர்ந்த 150 பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டது (இ-75)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் யோசப் இம்மனுவேல்

தோற்றம்: 07-08-1908
மறைவு: 16-04-1988

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய், அன்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய், எங்கள் அனைவரையும் வழி நடத்திய எங்கள் குலவிளக்கே! எங்களை எல்லாம் தனிமரமாக்கி, மனம் பதைக்கவிட்டு ஆண்டு ஒன்று ஆனது. பொட்டிழந்து, பூ இழந்து, பொன்நகை தான் இழந்து என்னை விதவையாக்கி வேதனையில் ஏகினீர் இறைனவடி. இவரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக 17-04-1989 திங்கட்கிழமை காலை 6 15 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

120/2, சொலமன் லேன்,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

பாசமுள்ள மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், சகோதரர்,
உறவினர்.

(137)

# கேள்வி அறிவித்தல்

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவித்திட்டத்தின் கீழ் சிறு நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் கமநலச் சேவை நிலையங்கள் புனரமைத்தல்

## கமத்தொழில் சேவைகள் திணைக்களம்,

## கிளிநொச்சி மாவட்டம்

கிளிநொச்கி மாவட்ட கமநலச் சேவைகள் உதவி ஆணையாளரினால் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் 1989-05-03ஆம் திகதி காலை 11.00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அவை அதே திகதியில் காலை 11.30 மணிக்கு திறக்கப்படும்.

| | வேலையின் பெயர் | | மீளப் பெறக்கூடிய வைப்புப் பணம் | தேவைப்படும் பதிவுத் தொகை |
|---|---|---|---|---|
| [1] | மம்மில்குளம் நீர் வெளியேறும் வாய்க்கால் | — | 250/- | 100000/- |
| [2] | உருத்திரபுரம் குளம் வெள்ளப்பெருக்கு அணைக்கட்டுத் திருத்துதல் | — | ,, | ,, |
| [3] | அன்யுத்துவான் பிள்ளையார் கோயில் குளம் திருத்த வேலை | — | ,, | ,, |
| [4] | பறவைக்குளம் திருத்த வேலை | — | ,, | ,, |
| [5] | இராமநாதபுரம் கமநலச் சேவை நிலையம் திருத்த வேலை | — | ,, | ,, |
| [6] | முழங்காவில் கமநலச் சேவை நிலையம் திருத்த வேலை | — | ,, | ,, |
| [7] | புளியம்பொக்கணை கமநலச் சேவை நிலையம் திருத்த வேலை | — | ,, | ,, |

02. கேள்விப் படிவங்களை மீளப்பெறக்கூடியதும் (ரூபா 250/-), மீளப்பெற டியாததுமான (ரூபா 25/-) தொகைகளை இக் கந்தோரில் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டுக்களுடன் பதிவுக்குரிய ஆவணங்களையும் கொண்டு வருபவர்களுக்கு 1989.05.02ஆம் திகதி பி. ப. 2.00 மணிவரை குறித்த கேள்விப் பத்திரங்கள் இவ் அலுவலகத்தில் வழங்கப்படும்.

03. இரண்டாவது பந்தியில் குறிப்பிடப்பட்ட ரூபா 250/- கட்டுப்பணம் பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்குப் பெருந்தாது (கூ. சங்கங்கள் மற்றும் கி. முன்னேற்றச் சங்கங்கள் ஆகியன).

04 மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை எம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ந. சண்முகநாதன்,
— உதவி ஆணையாளருக்காக
கமநலச் சேவைகள் திணைக்களம்,
கிளிநொச்சி மாவட்டம்.

கமநலச் சேவைகள் திணைக்களம்,
பூநகரி வீதி,
பரந்தன்.
12.04.1989

(C/2209)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

குறள்:

பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பிர் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல்.

பொருள்:

கிடைக்கக்கூடிய பயனை அளந்து பார்த்து, அதற்கு ஏற்றவாறு இனியசொல் கூறுகின்ற பண்பற்ற பொது மகளிரின் இன்பத்தை ஆராய்ந்து பொருந்தாமல் விட வேண்டும்.


# உதயன்

உண்மை - நேர்மை - அச்சமின்மை

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073

16 - 04 - 1989 த. பெ. இல: 23


## நம்பிக்கை பலிக்கட்டும்

தமிழ் - சிங்களப் புத்தாண்டு பிறந்ததோடு, அரசாங்க ஊழியருக்கும், முன்னாள் அரசாங்க ஊழியர்களான ஓய்வூதியம் பெறுவோர்க்கும் சிறிதளவேனும் நல்ல காலம் பிறந்திருக்கிறது என்று சொல்லத் தோன்றுகிறது.

அவர்கள் எதிர்பார்த்து, எதிர்பார்த்து ஏமாந்து போயிருந்த, கிடைக்காது என நினைத்த, கடந்த ஆண்டு வரவு செலவுத் திட்ட சம்பள, ஓய்வூதிய அதிகரிப்புகள் இந்த மாதம் தொடக்கம் வழங்கப்பட இருப்பதாக வெளிவந்திருக்கும் செய்தியையே இங்கு குறிப்பிடுகிறோம்.

1988 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட, ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதான வரவு - செலவு அறிக்கையில் அந்த வருடம் நவம்பரில் இருந்து அரசாங்க ஊழியருக்குச் சம்பள அதிகரிப்பும், ஓய்வூதியக்காரருக்கு அலவன்ஸ் அதிகரிப்பும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

மாதங்கள் ஐந்து கடந்து இப்போது ஆறாவதில் வந்து நின்ற போதிலும் வரவு - செலவு அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அதிகரித்த கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படவில்லை. அந்தக் கொடுப்பனவுகளை வழங்க அரசாங்க மட்டத்தில் ஆரம்ப நடவடிக்கைதானும் தொடங்கப்படவில்லை.

திணைக்களங்களுக்குப் பொறுப்பான மிக உயர்ந்த அதிகாரிகளிடம் இது பற்றிக் கேட்ட போதெல்லாம், அப்படி ஓர் அறிவுறுத்தல், தகவல், உரிய இடமான— உண்டியல் இடமான— திறைசேரியிடம் இருந்து கிடைக்கவில்லை என்றார்கள்.

சம்பள உயர்வு, அலவன்ஸ் உயர்வு அறிவிப்புகள் தம்மைக் கலந்தாலோசிக்காமல் வந்தவை என்றும்—

அவற்றை வழங்கக் கஜானா இடம் தரவில்லை என்றும்—

வேண்டுமானால் பின்னர் பார்க்கலாம் என்றும்— திறைசேரியினர் சொன்னார்கள். உடனடியாக வழங்குவது கஷ்டம் என்ற தொனியில் இழுத்தடித்தார்கள்.

அவர்களின் போக்கைப் — பேச்சைப் — பார்த்தால் சம்பள உயர்வும், அலவன்ஸ் அதிகரிப்பும் தேர்தல் குண்டுகளோ எனச் சந்தேகப்படவும் நேர்ந்தது.

இதனால், உள்விடயம் தெரியாமல் அரசாங்க உயர் அதிகாரிகளையும், பொறுப்பான அதிகாரிகளையும், உள்ளூர் அதிகாரிகளையும் வைதோரும் கண்டித்தோரும் உளர்.

எனினும் அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்திலும் அரச ஊழியர், ஓய்வூதியக்காரரின் அவநம்பிக்கையைப் போக்கும் விதத்திலும், இந்த மாதத்தில் அதிகரித்த கொடுப்பனவுகள் கிடைக்க இருப்பதாக நம்பிக்கையாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச திறைசேரி அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதின் விளைவாக சம்பள, அலவன்ஸ் அதிகரிப்புகளை வழங்க ஏற்பாடாகி உள்ளதாகவும் அறிய வருகிறது.

முந்திய அரசாங்கம் அறிவித்த உயர்வுகளை வழங்குவதற்கு உதவி செய்த ஜனாதிபதியின் நன்முயற்சி வரவேற்கப்பட வேண்டியதே. திறைசேரியைக் கலந்தாலோசிக்காமல் அறிவிக்கப்பட்ட உயர்வுகளை வழங்க நிதி ஒதுக்கீடு இல்லாமல் இருந்திருக்கும். எனினும் அவற்றை அப்படியே கைநழுவி விடாமல், முந்திய அரசின் மதிப்பை ஜனாதிபதி காப்பாற்றி விட்டார்.

அரச ஊழியரும், ஓய்வூதியக்காரரும் இது விடயத்தில் இனியும் ஏமாற்றம் அடையாமல் பார்த்துக் கொள்வதும் அவரது பொறுப்பே. இந்த மாதத்திலிருந்து சம்பள, அலவன்ஸ் உயர்வுகள் கிடைக்கும் என்ற அவர்கள் நம்பிக்கை பலிப்பதாக.

## ரஷ்யாவைக் கலக்கும் கொலைச் சம்பவங்கள்

சோவியத் யூனியனில் உள்ள உக்ரைன்குடியரசில் கணவன், மனைவி, அவர்களது இரு புதல்விகள் சேர்ந்து 14 பேரை விஷம் வைத்துக் கொலை செய்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும் 34 பேரை கொலை செய்ய முயற்சித்ததும் தெரிய வந்தது.

பத்து ஆண்டுகளாக இக்குடும்பம் கொலைநடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தது.

சோவியத் யூனியனில் இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. (எ)

★ தமிழ்நாட்டில்:

## இரண்டு வீதி விபத்துக்களில் இருபத்திரண்டு பேர் மரணம்

சென்னை, ஏப்ரல் 16

தமிழ்நாட்டில் நேற்று இடம்பெற்ற இரண்டு தனித்தனி வீதிவிபத்துக்களில் 22 பேர் உயிரிழந்தனர்.

வேலூரில் நடந்த விபத்தில் 10 பேர் இறந்தனர்; 14பேர் காயமடைந்தனர்.

பெரியபாளையம் என்னுமிடத்தில் நடந்த பஸ் விபத்தில் 12 பேர் உயிரிழந்தனர்; 45 பேர் காயமடைந்தனர். (எ)

★ இஸ்ரவேலினால் கைப்பற்றப்பட்ட

# அரபுப் பகுதியில் பொதுத் தேர்தல்; பூர்வாங்க நடவடிக்கைகள் ஆரம்பம்!

### பலஸ்தீனியரின் எதிர்ப்புக்கு மத்தியில்

ஜெரூசலம், ஏப்ரல் 16

கைப்பற்றப் பட்ட மேற்குக் கரை, காஸா ஆகிய அரபுப் பிரதேசங்களில் தேர்தலை நடத்தும் நடவடிக்கைகளை இஸ்ரவேலிய இராணுவம் எடுத்து வருவதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

பலஸ்தீனியர்கள் கலந்து கொள்ளும் இத்தேர்தல் பற்றிய யோசனையை அமெரிக்கா சென்றிருந்த சமயம் ஷாமிர் அதிபர் புஷ்ஷிடம் சமர்ப்பித்திருந்தார்.

மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண புதிய யோசனைகளை சமர்ப்பிக்கும்படி இஸ்ரவேலை அமெரிக்கா நிர்ப்பந்தித்து வந்தது.

அதைத் தொடர்ந்து தான் இஸ்ரவேலியர்களினால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் தேர்தல் நடத்தும் யோசனையைப் பிரதமர் ஷாமிர் வெளியிட்டார்.

இந்த யோசனையை பலஸ்தீன விடுதலை இயக்கம் தெரிவித்துள்ளது,

இந்த எதிர்ப்பு தணிந்து விடும் என்று அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இதனிடையில், பலஸ்தீன விடுதலைஇயக்க உறுப்பினரையும்கொண்ட அரபு லீக் தூதுக்குழு ஒன்றை சந்திக்கும்படி அமெரிக்கா கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இது தற்சமயம் ராஜாங்க அமைச்சின் பரிசீலனையில் உள்ளது.

இதே வேளை, கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் தேர்தலை நடத்துவதற்கான பூர்வாங்கஏற்பாடுகள் ஆரம்பமாகி விட்டன. (எ)

# விசாரணைக்கமிஷன் வைப்போம்என்றுகூறி தி. மு. க. அரசை பயமுறுத்தமுடியாது!

### கோடம்பாக்கத்தில் கருணாநிதி முழக்கம்

சென்னை, ஏப்ரல் 16

இந்தியாவின் கடைசி ஜனநாயகவாதி பண்டிதர் ஜவஹர்லால் நேரு என்று பேரறிஞர் அண்ணா சொன்னதை பிரதமர் ராஜீவ் காந்தி தமிழக சட்டசபையைக் கலைப்பதன் மூலம் நிரூபிக்கப்போகிறாரா?

முதலமைச்சர் கருணாநிதி, சென்னைகோடம்பாக்கம்பகுதியில் நடந்த தி. மு. க. பேரணியில் பேசியபொழுது இப்படிக் கேட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது;

ஜெயலலிதா ராஜினாமா விவகாரம், மார்ச் 25 இல் சட்டசபையில் நடந்த அமளிதுமளி ஆகியன பற்றி விசாரணை நடத்தப்படும் என்ற பயமுறுத்தலுக்கு தி. மு. க. அரசு பணிந்துவிடாது.

விசாரணை நடத்த வேண்டுமானால் இணை அமைச்சர் ப. சிதம்பரம் நடத்தட்டும்.

ஆனால் விசாரணைக்குழு, தேர்தலுக்காக அ. தி. மு. க. ஜெ அணி சேர்த்த பணம் 3 கோடி ரூபா செலவழிக்கப்பட்ட விதம், ஜானகி - ஜெயலலிதா அணிகள் இணைந்த விதம், ஒருகோடி ரூபா அதற்காக கைமாறிய விதம் ஆகியவை பற்றி எல்லாம் விசாரணை நடத்த வேண்டும்.

விசாரணைக்கு அச்சப்படுபவர்கள் நாங்கள் அல்லர். இந்திரா காந்தியின் ஜனநாயக ஆட்சியையும் பார்த்தோம்; சர்வாதிகார ஆட்சியையும் பார்த்தோம்'

கமிஷன் நியமிக்கப்படும், ஆட்சி கவிழ்க்கப்படும் என்று வெருட்டுவது எல்லாம் அரசமைப்புக்கு உட்பட்டதா?

ஜெயலலிதாவின் ராஜினாமாக் கடிதம் அரசு அதிகாரி நடராஜனிடம் இருந்தது அரசியல் யாப்புக்கு உட்பட்டதா?

சட்டசபை அமளிதுமளி குறித்து நான் பதவி விலக வேண்டும் என்று அமைச்சர் சிதம்பரம் கேட்கிறார்.

பொய்க் குற்றச்சாட்டுக்களுக்காக நான் பதவி விலக வேண்டும் என்றால், எத்தனையோ முறை நிரூபிக்கப்பட்ட உண்மைக் குற்றச்சாட்டுக்களுக்காக மத்திய அமைச்சர்கள் பல முறை ராஜினாமாச் செய்திருக்க வேண்டுமே?

பத்திரிகைச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் சட்ட மூலத்தைக் கொண்டு வந்ததற்காக அமைச்சர் சிதம்பரம் ராஜினாமா செய்வாரா?

மேல்சபையை ஒழிக்க ஆதரவு தரும்படி முதலமைச்சர் என்ற முறையில் எம். ஜி. ஆர். பிரதமர் ராஜிவுக்கு கடிதம் எழுதினாரே; முதலமைச்சர் இப்படி எழுதியது அரசியல் யாப்புக்கு உட்பட்டதா?

பிரதமர் காந்தியின் பெருமையை அமைச்சர்கள் தினேஷ்சிங், சிதம்பரம் ஆகியோர் மாசுபடுத்துகின்றனர்.

சர்தார் பட்டேல் இருந்த இடத்தில் இருக்கும் ஓர் அமைச்சர் பற்றி பிரதமரிடம் நான் தனிப்பட்ட முறையில் சொல்ல இருக்கின்றேன்''— இப்படி கலைஞர் பேச்சில் குறிப்பிட்டார். (எ)

### ஜனதாக் கட்சிப் பிரமுகர் ராஜினாமா

இந்திய ஜனதா கட்சிப் பிரமுகரான திரு. நரேஷ் யாதவ் நேற்று இந்திரா காங்கிரஸில் சேர்ந்தார்.

ராஜ்ய சபா எம்.பி பதவியையும் அவர் இராஜினாமாச் செய்தார்.

ஜனதாக்கட்சியின் மூலம் எம்.பியாக தெரிவு செய்யப்பட்டபடியால்தான் அப்பதவியை ராஜினாமாச்செய்வதாக திரு. யாதவ் தெரிவித்தார்.

# இஸ்ரவேலின் தாக்குதலில் ஆறு பலஸ்தீனியர் பலி

இஸ்ரவேலிய இராணுவம் சுட்டதில் ஆறு பலஸ்தீனியர் உயிரிழந்தனர். கடந்த வியாழன் இச்சம்பவம் கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசமான மேற்குக் கரைப் பகுதியில் இடம் பெற்றது.

பெத்லஹம் அருகில் இஸ்ரவேலிய இராணுவத்தினரை பலஸ்தீனியர் வழிமறித்தனர். அப்போது மோதல் ஏற்பட்டது.

16 மாதங்களுக்கு முன்னர் பலஸ்தீனியர் நாயகம் மீட்கும் கிளர்ச்சியை ஆரம்பித்தனர். அதன் பின்னர் இடம் பெற்ற மோசமான தாக்குதல்களில் இதுவும் ஒன்றாகும்.

இஸ்ரவேலியரின் இத்தாக்குதலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வன்மையாகக் கண்டித்திருக்கிறது. (எ)

# உலக நீதிமன்ற பதவிக்கு நான்கு நாடுகள் போட்டி

உலக நீதிமன்றத்தில் காலியான நீதிபதி பதவிக்கு நான்கு நாடுகள் போட்டியிடுகின்றன.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, தாய்லாந்து நாடுகளே அவை.

முன்னர் போட்டியிடவிருப்பதாக அறிவித்த பிலிப்பைன்ஸ் தற்போது அதில் இருந்து விலகி விட்டதாக அறிவித்துள்ளது.

இந்தியாவின் சார்பில் நீதிபதியாக இருந்த டாக்டர் நாகேந்திரசிங் காலமானதைத் தொடர்ந்தே இப்பதவி காலியாகியது (எ)

## 42 பேர் மரணம்

ஒஸ்லோ, ஏப்ரல 16

நோர்வே கடலில் சோவியத் அணு நீர்மூழ்கிக் கப்பல் மூழ்கிய சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 42 என்று சோவியத் யூனியன் நேற்று அறிவித்தது.

கடந்த வெள்ளிக்கிழமை இவ்விபத்து இடம்பெற்றது.

## ஹங்கேரியும் கைச்சாத்திட்டது

ஐ நா. ஏப்ரல் 16

ஐ.நா. அகதிகள் புனர்வாழ்வு சாசனத்தில் கையெழுத்திட்ட முதலாவது வார்ஸோ அமைப்பு நாடு என்ற பெயரை ஹங்கேரி பெற்றுக் கொண்டது.

ருமேனியாவில் இருந்து அகதிகளாகவரும் ஹங்கேரிய இன அகதிகளை பராமரிப்பதற்குத் தேவையான நிதி உதவியைப் பெறுமுகமாகவே ஹங்கேரி இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது. (எ)

## அயோத்தியில் ராமநவமி

உத்தரப்பிரதேசத்தில் ஸ்ரீ ராமன் பிறந்த அயோத்தியில் நேற்று ராமநவமி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இலட்சக்கணக்கான பக்தர்கள் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர். (எ)

## கம்பூச்சியாவில் புத்தாண்டு

கம்பூச்சியா மக்கள் கடந்த வியாழன், தங்கள் பாரம்பரிய புத்தாண்டு தினத்தைக் கொண்டாடினர்.

கம்பூச்சியப் பிரச்சினைக்கு சுமுக தீர்வுகாண வேண்டும் என்று தலைவர்கள் பிரதிக்ஞை எடுத்தனர். (எ)

# லெபனன் மோதலை ஐ. நாவுக்கு கொண்டு செல்ல முயற்சி

14 ஆண்டுகால லெபனன் மோதலை ஐ. நாவின் கவனத்துக்குக்கொண்டு வருவதற்கு லெபனன் அரசு தீர்மானித்துள்ளது.

இந்த முயற்சியை அமெரிக்கா கடுமையாக எதிர்க்கும் என்று வாஷிங்டனில் இராஜாங்க அமைச்சு அறிவித்தது.

பிரச்சினைக்குத் தீர்வுகாண அரபுலீக் எடுத்துவரும் முயற்சிகளுக்கு தொடர்ந்து அமெரிக்கா ஆதரவளிக்கும் என்றும் அந்த அறிவிப்புத் தெரிவித்தது. (எ)

# பாடநூல்களை இனித் தமிழிலேயே எழுதி வெளியிடுவதற்கு ஏற்பாடு

### கல்விச் செயலாளர் மன்சூர் தகவல்

வேலணை, ஏப்ரல் 16

தற்பொழுது அரசாங்கம் புத்தகங்களைச் சிங்களத்தில் தயாரித்து அவைகளைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுகிறது. இதனால் தமிழரின் கலாசாரம் உண்மையிலேயே மறைக்கப்படுகின்றது. இதனை மாற்ற நாமே புத்தகங்களை எழுதி தேசிய கல்வி நிறுவனத்தின் அங்கீகாரத்துடன் பிரசுரிக்க உள்ளோம்.

வேலணை கோட்டக் கல்வி அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் வடக்கு-கிழக்கு மாகாணசபை கல்வி அமைச்சின் செயலாளர் ஜனாப் எம். எம். மன்சூர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் கல்விப் பிரதிப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி விழாவுக்குத் தலைமைவகித்தார். ஜனாப் மன்சூர் தமது உரையில் மேலும் கூறியதாவது:

'அலுவலகம் திறப்பது முக்கியமல்ல. அவை திறம்பட இயங்கவேண்டும். ஆசிரியர்கள், அதிகாரிகள் ஒழுங்காகக் கடமைக்கு வரவேண்டும். ஆசிரியர்கள் மனநிறைவுடன் கடமையாற்றவேண்டும். அப்பொழுதுதான் கல்வித்தரம் உயரும்.

'வடக்கு-கிழக்கு மாகாணத்தின் கல்விச் சேவையில் கடமையாற்றுபவர்கள் புரிந்துணர்வுடன் கடமையாற்ற வேண்டும். இங்குள்ள ஆசிரியர்கள் கிழக்கிலும், அங்குள்ளவர்கள் இங்கும் கடமையாற்றத் தயாராக இருக்க வேண்டும். இன்றும் கிழக்கு மாகாண மக்கள் வட மாகாண மக்களைச் சந்தேகக் கண்ணுடனேயே பார்க்கின்றனர். இந்நிலைமை நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

### தனியான பரீட்சைப் பகுதி

'எமது மாகாண அரசு பரீட்சை, புத்தகவெளியீடு கல்விச்சேவை ஆகியவற்றைச் செயற்படுத்த எண்ணியுள்ளது. பரீட்சைத் திணைக்களம் ஒன்றை உருவாக்கி, இவ்வாண்டு இறுதிக்குள் 9ஆம், 10ஆம், 11ஆம் ஆண்டுப்பரீட்சையை நடத்த எண்ணியுள்ளோம்.

ஒருவருடத்தின்பின் மீண்டும் எமது மக்கள்மத்தியில்கடமையாற்றச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. நான் இங்கு கொத்தணி அமைக்கப்பட்ட பொழுது உங்களுக்கு அளித்த வாக்குறுதியை இன்று நிறைவேற்றுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்படி அவர் கூறினார்

பிரதம கல்வி அதிகாரி திரு க. கந்தசாமி, வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. சி. சடாட்சர சண்முகதாஸ், யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் பொன். பாலசுந்தரம் பிள்ளை, புங்குடுதீவு, மண்டைதீவு, நெடுந்தீவு கொத்தணி அதிபர்கள் உட்படப் பலர் உரையாற்றினர்கள். [ச-167]

### நீ தயங்குவதேன்? ஐயா!

★★★★★★

அன்றொரு நாளில் அம்பிக்
 கழகொளிர் வள்ளி மாதை
நன் கொளிர் களிறுய் நின்று
 நன் மணஞ் செய்வித் தாயே!
இன்றெங்கும் இடுக்கண் எய்தி
 இடர்ப்படும் எம்மக் கட்கு
நின்றுயர் உதவி செய்ய
 நீ தயங் குவதேன்? ஐயா!

— கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

[அம்பி = தம்பி (முருகன்)
களிறு = யானை]

(இன்று நல்லூர் கயிலாச பிள்ளையார் 6 ஆம் திருவிழா)

## சமய நிகழ்ச்சிகளில்

### துர்க்கை அம்பாளின் மணவாளக் கோலம்

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான மணவாளக்கோலத் திருவிழா 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

காலை 6 – 30 மணிக்கு யாகசங்கு பூசைகளும் நண்பகல் ஒரு மணிக்கு அன்னதானமும் நடைபெறவுள்ளன.

மாலை 5 – 30 மணிக்கு அம்பாள் பூந்தண்டிகையில் எழுந்தருளி திருவீதி உலா வருவாள். [ச]

### கண்ணகை ஆலய திருவிழா

புங்குடு தீவு 10 - ஆம் வட்டாரம் ஸ்ரீ கண்ணகைஅம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 6 ஆம் திகதி நடைபெற்ற கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இம்மாதம் 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 - 30 மணிக்கு தேர்த்திருவிழாவும் பிற்பகல் 3 - 00 மணிக்கு சமுத்திரத் தீர்த்தமும், 20 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7 - 30 மணிக்கு திருவூஞ்சல் திருவிழாவும், 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். [க - 51]

### ஆசார்யாபிஷேகம்

சுன்னாகம் மயிலணியைச் சேர்ந்த சிவஸ்ரீ சிதம்பரநாதக் குருக்கள் தியாகராச சர்மா அவர்களுக்கு 10- 4 89திங்கட்கிழமை மயிலணிச் சிவன் கோயில் தேவஸ்தானத்தில் சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள் அவர்களால் ஆசார்யாபிஷேகம் சிறப்பாக நடத்தி வைக்கப்பட்டது. [க]

### ஜனசக்தி கருத்தரங்கு

சாவகச்சேரி, ஏப்ரல் 16

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வறுமை நிவாரணக் குழுவின் உறுப்பினர்களுக்கு இரு நாள் பயிற்சிக் கருத்தரங்குகள் நடைபெற்றன.

உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை இதனை ஆரம்பித்து வைத்தார்.

நகரசபை மண்டபத்திலும் ப. நோ. கூ. சங்க மண்டபத்திலும் நடைபெற்ற இக்கருத்தரங்குகளில் கி. சே. அலுவலர்களும் கலந்து கொண்டனர். க - 31)



[illegible] நோன்பு திறப்பு [illegible] வழங்கப்படுகிறன. ஆனால் [illegible]

(ஸஹர் முடிவு 4-28
நோன்பு திறக்கும்
நேரம் - 6 19)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சேட்டிங் சூட்டிங்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகல விதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்த இடம்

மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை : யாழ்ப்பாணம்.

# உதயன்

16- 04 - 1989 ஞாயிற்றுக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
✶ பட்டுப் பிடவைகள்
✶ பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்

மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

## இலங்கையுடன் நேரடியாக....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
யான ஒழுங்குகளைச் செய்து கொள்ளலாம் என்று விடுதலைப் புலிகள் இயக்கம் தெரிவித்து உள்ளது— என்று அரசு நேற்று அறிவித்தது.

இதேவேளை கொழும்பில் உள்ள தனது செய்தியாளரை ஆதாரங்காட்டி பி. பி. ஸி. நேற்றிரவு பின்வருமாறு அறிவித்தது:-

இலங்கை அரசுத் தலைவர்களுடன் நேரடிப் பேச்சுக்களை நடத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சம்மதித்தது இங்கு பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை அரசுடன் நேரடிப் பேச்சுக்களை நடத்த முன்வரும்படி வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன விடுத்த அழைப்பின் தொடர்பாகவே—

இச் சந்திப்புக்குச் சம்மதிப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தெரிவித்திருக்கிறது.

ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள பதிலில் ''அழைப்பை வரவேற்பதாக'' —தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் குழு தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதம ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் ''அதிகரித்து வரும் வன்செயல்கள் மத்தியில் இது மிக முக்கிய முன்னேற்றம்'' என்று சொன்னார்.

''நாம் ஜனாதிபதியுடன் பேசத் தயாராக இருக்கிறோம். வன்செயல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்க விரும்புகிறோம்'' — இப்படி டாக்டர் பாலசிங்கம் சொன்னார்— இவ்வாறு பி.பி.ஸி. அறிவித்தது.

(உ-எ)

## லண்டனில் 74 பேர் பலி

லண்டன், ஏப்ரல் 16

லண்டன் ஷேர்பீட்டில் நேற்று மாலை நடைபெற்ற 'எவ். ஏ. கப்' உதைபந்தாட்ட அரையிறுதிப்போட்டியின்போது இடம்பெற்ற அசம்பாவிதம் ஒன்றில் 74 பேர் பலியாகினர். 150 பேர் படுகாயமடைந்தனர்.

மைதானத்தில் அவசர மீட்புப் பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

(உ)

## ஈ.பி.ஆர்.எல்.எவ்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
எமது சமுதாயத்தை மீண்டும் காட்டுமிராண்டி நிலைக்கு இட்டுச் செல்ல நாம் அனைவரும் உதவுவதாகவே அமையும்.

மனித உரிமைகளைப் பேண முனையும் ஜனநாயக சக்திகளும், மக்களும், பொது நிறுவனங்களும் இணைந்து இத்தகைய அராஜக நடவடிக்கைகளுக்கெதிராக குரல் கொடுக்க வேண்டும்.

நிரந்தர அமைதியையும், சமாதானத்தையும் நோக்கி மக்களை வழி நடாத்த முற்படும் அனைத்து சக்திகளும் இத்தகைய நடவடிக்கைகளை கண்டிக்க முன்வர வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் கண்டிக்கத் தவறுவது தீயசக்திகளுக்கு உதவுவதாகவே அமையும்.

(உ)

## மண்டை ஓடு.-.,

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
கூடுகள் வறுமைமிக்க மாநிலங்களில் இருந்து கல்கத்தாவிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

பூரணமான மனித எலும்புக்கூடு ஒன்று இந்தியப்பணத்தில் 10 ஆயிரம் ரூபாவுக்கு விலைபோகிறது.

## தமிழர் தாயகக்.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]
ளின் தாயகக் கோட்பாட்டினை, இல்லாதொழிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் வெலிஓயாத் திட்டத்தினை நிறைவேற அனுமதிப்பது என்பது இந்த ஒப்பந்தத்தில் தமிழ் பேசும் மக்கள் நம்பிக்கை இழக்க வகை செய்யும்.''

— ''வெலிஓயா அத்துமீறல் வடக்கு – கிழக்கு துண்டாடும் சதி'' என்ற தலைப்பில் நாம் 08.09.1988 இல் வெளியிட்ட கை நூலின் ஒரு பகுதியே மேலே தரப்பட்டது.

இந்தக் கை நூலிலே 15.04.88 இல் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி பத்திரிகையில் 'மணலாறு பிரதேசம்' (வெலிஓயா) சிறப்புப்பிரதேசம் என அறிவிக்கப்பட்டு அதன் எல்லைகள் வரையறுக்கப்பட்டு இருப்பதைச் சுட்டிக்காட்டி புதியதொரு மாவட்டம் அமைப்பதற்கான முன்முயற்சியே இது என எச்சரித்திருந்தோம். அது இன்று நிதர்சனம் ஆகிவிட்டது.

எனவே இத்தகைய நிலையில் —

1. எமது தாயகக் கோட்பாட்டிற்கு இலங்கை–இந்திய ஒப்பந்தம் எந்த வகையிலும் பயன்படாது என்பதையும்—

2. ஒப்பந்தத்தை அமுலாக்குவது என்று கூறிக்கொண்டு ஆயுதக்களைவு என்ற அம்சத்தில் மட்டுமே தனது கவனத்தை விடாப்பிடியாக இந்திய அரசு மேற்கொள்ளுவது தவறு என்பதையும் —

3. ஸ்ரீலங்கா அரசின் தன்னிச்சையான செயல்பாடுகளின் கபடத்தனமான சூழ்ச்சிகளை முறியடிக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராட்டத்தினை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகிறது என்பதனையும் இக் கட்டத்தில் ஈழவர் ஜனநாயக முன்னணி சுட்டிக்காட்டுகிறது.

## OBITUARY

### Wilson Allegacon

Wilson Allegacon (Ex Insurance Corp., Jaffna) Beloved husband of Christeen Ranji (Thnthai Selva, Tellippalai), loving father of Shiranee, Ithayan (Travels Lama, Colombo), Inthiran and Dileep. Son of late Mr. & Mrs. Morgan Allegacon. Brother of Pushpam Edwards and late Inbam Thambirajah. Died under tragic circumstances.

Service at 9-00 a. m. on Monday the 17th K. K. S. Road, Tellippalai.

(10591)

### Samuel Ariarajah Handy

Samuel Ariarajah Handy (Retired Engineer, Telecommunication Dept.) Husband of Jeevamalar, father of late Suresh, Priya, Rohan, Glen and Chrisho. Father in law of Sugu, Nimalka, Nilanthy and Keran. Grand father of Ashani, Roshani, Tania Tamara and Dilani.

Funeral Service at No 34, Mahawatte Road. Embuldeniya, Nugegoda at 9-15, Sunday the 16th Burial at Karate.

Rev. D. G. Paul Raj

46, Kachcheri East Lane,
Chundikuli.

[10586]

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி. வேலுப்பிள்ளை தில்லைரஜனி

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் 9 ஆம் வருடத்தில் கல்வி பயிறுவந்த செல்வி வே. தில்லைரஜனி– 14-04-1989 ஆந் திகதி இறைவனடி சேர்ந்துவிட்டார்.

குடும்பத்தின் ஒளி விளக்காய், அறிவின் சுடரொளியாய், பாசத்தின் பிறப்பிடமாய் பொறுமையின் உறைவிடமாய் எமக்கெல்லாம் ஒளிவீசி இடையில் எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டகன்ற எங்கள் அன்பின் ரஜனியே,! உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பின்
சண்டிலிப்பாய் கல்வி நிலைய
ஆசிரியர், மாணவர்கள்.

அப்பிளாக்கை,
சண்டிலிப்பாய்.

[174]

## கண்ணீர் அஞ்சலி

### சச்சிதானந்தன் தயாபரன்

14-4-89 அன்று அகால மரணமடைந்த திருநெல்வேலி கேணியடியைச் சேர்ந்த செல்வன் சச்சிதானந்தன் தயாபரன் [நொதேண் பார்மஸி, யாழ்ப்பாணம், கேணியடி மத்திய சனசமூக நிலைய உறுப்பினர்] அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

திருநெல்வேலி
கேணியடி மத்திய சனசமூக
நிலையத்தினர்.

[10594]

## அமைதிப்படை..,

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
னேட், ஒரு கிரனேட் மற்றும் வெடி மருந்துகளையும் அதிகாரிகள் பார்வையிட்டனர்.

குண்டு வெடித்த பகுதியில் ஒரு ''ஹைஏஸ்'' வானும் இரு மோட்டார் சைக்கிள்களும் சேதம் அடைந்த நிலையில் கிடந்தன.

மரங்கள், வாழைகள் கருகிய நிலையில் காணப்பட்டன.

சேதம் அடைந்த சுமார் பத்து வீடுகள் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டன.

மின்சார வயர்கள் அறுந்ததால் அப்பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது.

குண்டு வெடிப்புச் சம்பவம் நடைபெற்ற இடத்தை இந்திய ஜவான்கள் போக்குவரத்து நடவாமல் தடுத்திருந்தனர். அதனால் சனநடமாட்டத்தைக் காணமுடியவில்லை.

குண்டு வெடிப்பு இடம் பெற்ற நேரத்திற்கு சற்று முன் பின்னாக, யாழ். பல்கலைக் கழகத்துக்கு அருகில், பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான பஸ் ஒன்று தீயிட்டு கொளுத்தப்பட்டதாக அறிய வருகிறது.

இதேவேளை வெடிகுண்டு இருந்ததாகக் கூறப்படும் வாகனத்துக்கு அருகே பக்கத்தில் வந்ததாகக் கூறப்படும் சிலரே இந்தச் சம்பவத்தில் மரணமானதாகத் தெரியவந்தது.

[அ-இ-உ-9]

## ● மரண அறிவித்தல்கள் ●

### மரிசலின் சூசைநாயகம்

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த மரிசலின் சூசைநாயகம் [ராசு] அகால மரணமடைந்து விட்டார். மரிசலின் சந்தன்மேரி அவர்களின் அன்புப் புதல்வனும் அல்போன்ஸ்சம்மா [தங்கம்] ஆகியோரின் அன்புக் கணவரும் பமிலா, மிரோஜன், சபின்ஸ்சலா, கிந்துஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவி, சரோ ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் நல்லடக்கம் திங்கட்கிழமை 17-4-89 காலை 9 மணிக்கு புனித அந்தோனியார் சேமக்காலையில் நடைபெறும்.

தகவல்:
அ. மோகன்.

[163]

### நல்லையா பாஸ்கரன்

திருநெல்வேலியைச் சேர்ந்த நல்லையா பாஸ்கரன் 14-04-1989 அன்று அகால மரணமானார்.

அன்னார் இளைப்பாறிய ஆசிரியர் நல்லையா (பரஞ்சோதி), திருமதி அழகம்மா–நல்லையா (ஆசிரியை, கோண்டாவில் இ. கி. வித்தியாலயம்) அவர்களின் கனிஷ்ட புதல்வனும், திருமதி இ. அங்கையற்கண்ணி (ஆசிரியை, கொட்டாஞ்சேனை), ஸ்ரீதரன், பகீரதன், அனிதாகினி (யாழ். பல்கலைக்கழகம், விஞ்ஞானபீடம்), அனுராதா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராதாகிருஷ்ணனின் (Air Lanka) அன்பு மைத்துனரும் ஆவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (16-04-1989) பிற்பகல் 4-00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் கணக்கமரத்தடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

25, 6 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [10593]

தகவல்!
திரு. ச. நல்லையா

### திரு. சுப்பிரமணியம் தர்மலிங்கம்

வேலணை பள்ளம்புலத்தைச் சேர்ந்த காலம் சென்ற திரு. ம. சுப்பிரமணியம், திருமதி செல்லம்மா ஆகியோரின் அருமை மகனும், வேலணை கிராம சபை 5ஆம் வட்டார முன்னாள் அங்கத்தவரும், யாழ். மார்க்கட் வியாபாரியுமான கொட்டடியைச் சேர்ந்த திரு. சு தர்மலிங்கம் 14-04-1989 இல் காலமானார்.

அன்னார் அனுசம்மாவின் அன்புக் கணவரும், த. விநாயகமூர்த்தி (உதவி வணிக அத்தியட்சகர், புகையிரதப் பகுதி), த. தியாகராசா (பிரான்ஸ்), திருமதி பிரபாவதி த. திருச்செல்வம் (தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம்), த. சிவபாலன் (ஜேர்மனி), த. மணிமேகலாதேவி (U. K.), த. இராஜேஸ்வரன் (சுவிற்ஸிலாந்து), த. பிரேமாவதி – த. இராஜேஸ்வரி (வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி பாலசிங்கத்தின் அருமைச் சகோதரரும், வேலணை கிழக்கைச் சேர்ந்த காலம் சென்ற திரு. சோமனாதபிள்ளை, திருமதி சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும், திருமதி சிவகாமசுந்தரி, திரு. ந. பஞ்சாட்சரம் (உதவித் தபாலதிபர், நுவரேலியா), திருமதி கலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திரு. சோ. கந்தையா (ஓய்வு பெற்ற ஆசிரியர்), திருமதி கதிரவேலு, திருமதி சோமசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக் கிழமை 32/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2-00 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினரும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. விநாயகமூர்த்தி

32/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

[10585]

### திரு. இரத்தினசாமிஐயர் தங்கராஜாஐயர்

(பண்டாரஐயர் செல்வச்சந்நிதி ஆலய பிரதம குருக்கள்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய பிரதம பங்காளரும் பிரதம பூசகருமான இரத்தினசாமிஐயர் தங்கராஜாஐயர் அவர்கள் 13-04-89 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

இவர் இராசமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இரத்தினசாமிஐயர் பவளக்கொடியின் அருந்தவப் புதல்வரும், காலஞ்சென்ற கந்தசாமிஐயர் தங்கப்பொன்னுவின் மருமகனும், பொன்மணி காலஞ்சென்ற சின்னையா கனகேந்திரன், மகேஸ்வரி, காலஞ்சென்ற ரவீந்திரன், குகனேந்திரன், அகிலேந்திரன், இரத்தினவதனி ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவரத்தினலிங்கம், நாகேஸ்வரி, ஜெயசுந்தரம், வசந்தமலர், சசிகலா, இரத்தினகுமாரி, ஆகியோரின் அன்பு மாமனும் கவிதா, சுகிதா, செந்தீபன், அனிதா, நந்தகுமார், ஜெயந்தகுமார், ரவீந்தன், சுஜந்தன், சுதர்தன், மயூரதன், யாழினி, திவ்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-04-89 வியாழக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் செல்வச்சந்நிதி மயானத்தில் நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு. (10574)

தகவல்:
த. இராசமணி

### திரு. பசுபதி அகஸ்தியன்

(ஓய்வுபெற்ற இலங்கை வர்த்தக வங்கி உத்தியோகத்தர் கொழும்பு.)

மல்லாகம் நீதிமன்ற ஒழுங்கையைச் சேர்ந்த திரு: பசுபதி அகஸ்தியன் 15-4-89 ஆம் திகதி மரணமானார்.

அன்னார் காலம்சென்ற திரு திருமதி பசுபதி இராசம்மா தம்பதிகளின் ஏகபுதல்வனும், திருமதி கமலாதேவியின் அன்புக் கணவரும், அசோகன் (வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி), அமிர்தா (உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம்சென்ற திரு. சிவகுரு, திருமதி தனலட்சுமி ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 16-4-89 ஆம் திகதி (இன்று) 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

நீதிமன்ற ஒழுங்கை,
மல்லாகம். (175)

தகவல்
அ. அசோகன்

### திரு. க. அரியபுத்திரர்

நயினாதீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலம் சென்ற கந்தப்பர்முத்தர் அவர்களின் அன்பு மகனும், சிவக்கொழுந்துவின் அன்புக் கணவருமான திரு. அரியபுத்திரர் அவர்கள் 15 – 04 – 89 இல் காலமானார்.

அன்னார் இராமலிங்கம், சின்னையா, காலம் சென்றவர்களான இராமநாதர், ஐயாத்தைப்பிள்ளை, நாகமுத்து சின்னத்தங்கம், சின்னப்பிள்ளை, இளையபிள்ளை ஆகியோரின் சகோதரரும், வீரவாகு, மாணிக்கம், நடராசா, கந்தசாமி, சுந்தரம்பிள்ளை, இரத்தினசபாபதி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 16 – 04 – 89 இன்று மாலை 4.00 மணியளவில் நயினாதீவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள். நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மு. சின்னையா, சி. வீரவாகு.

3 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(10592)

### வை. இராமசாமி (சின்னத்துரை)

[உத்தரவுபெற்ற வர்த்தகர் A.D]

கல்வியங்காடு, ஆடியபாத வீதியைச் சேர்ந்த சின்னத்துரை என அழைக்கப்படும் திரு. வைத்திலிங்கம் இராமசாமி [உத்தரவுபெற்ற வர்த்தகர் A.D] காலமானார்.

இவர் பவளத்தின் அன்புக் கணவரும், விஜயரத்தினம் [G.M., Dynamic Engineering, Limited], விஜயதேவி (U.K), விஜயகுமாரன் [Vijaya Stores], விஜயராணி [U.K], ஜெகசோதி ஆகியோரின் அன்புத் தந்தையும், நாதன் [U.K], சுந்தரலிங்கம் [U.K], தில்லைநாதன் (Shift Chemist, Cement Corporation, K.K.S), செல்வரத்தினம் [Research Officer Agriculture Dept, கிளிநொச்சி] ஆகியோரின் அன்பு மாமனாரும், மேனகா [U.K], ஆனந் [U.K] ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், காலம் சென்ற சரவணமுத்துவின் அன்புச் சகோதரனும், ஆசிரியர் கந்தசாமி [புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி] ஆகியோரின் சிறிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 16 – 04 – 89 இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. விஜயரத்தினம்

23, செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(10587)

### திரு. கனகரட்ணம் முருகரட்ணம்

(சமாதான நீதிவான், உப தலைவர் M.P.C.S. கூட்டுத்தாபனம் – யாழ். இந்துக் கல்லூரி; சைவ பரிபாலன சபை; பழைய மாணவர் சங்கம் – யாழ். இந்துக் கல்லூரி, யாழ். பொதுசன நூலகம் ஆகியவற்றின் நிர்வாகக் குழு அங்கத்தவர்)

திரு. கனகரட்ணம் முருகரட்ணம் (J.P) 14-04-89 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் இராஜேஸ்வரியின் (இளைப்பாறிய ஆசிரியை சுன்னாகம் இராமநாதன் கல்லூரி) அன்புக் கணவரும், சுதர்சினி (கனடா) வாசுகி (கனடா), வசந்தமோகன் (கனடா), காலஞ்சென்ற ஜெகன் மோகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரேமலதா, பாலசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், துளசி, கேசவன் ஆகியோரின் அன்புப் பேரனும், கனகரட்ணம் முருகானந்தத்தின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-04-1989 சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
மனைவி, மக்கள்

281, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

[10590]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

... [பிரைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 16 — 04 — 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.